# பாவனையாளர்களானுலும் பதுக்கினுல் தண்டனை

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன 444 தந்தி 'இரத்தினம்ஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 312
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் மார்கழி 6 ஷவ்வால் 21 திங்கட்கிழமை (21-12-70)

நத்தார் - புத்தாண்டு
தேவைகளுக்கு
உயர்ந்தரக
ஜவுளி வகைகளை
பெற்று மகிழ
விஜயஞ் செய்யுங்கள்!
கணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடை சந்தி)
208, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம்.

கொழும்பு, ஞாயிறு

அத்தியவசியாப் பொருட்களைவாங்கி பதுக்கி வைக்கும் பாவனையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் பொருள்தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற பயத்தில் பாவனையாளர்கள் அவசியமான உணவுப் பொருட்களை நேரத்தோடு வாங்கி பதுக்கி வைக்கமுடியாதுஎன்றுதெரிகின்றது இப்படிப்பதுக்குகிறவர்கள் மீதும் அவசரகாலசட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுப்பது பற்றி வர்த்தக அமைச்சு ஆலோசித்துவருவதாகத் தெரிகின்றது

அத்தியாவசிய உணவுப் பொருட்களைப்பதுக்குகிறவர்கள் மீது அவசரகால சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம்முடிவுசெய்திருக்கின்றது

பாவனையாளர்கள் பொருட்களைவாங்கிப்பதுக்கி வைப்பதற்கு எதிராகவும் இந்த சட்டத்தின் கீழ்நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

இத்தக்குற்றங்களைப் புரிகிறவர்களுக்கு அபராதம் விதிக்கப்படாமல், ஜெயில் தண்டனையே விதிக்கப்படும் என்று தெரிகின்றது

## முயற்சி

உடுப்பிட்டி. ஞாயிறு

தமிழ்ச் சுருக்கெழுத்துக் கலையை மேலும் அபிவிருத்தி செய்து சுருக்கெழுத்தாளர்களின் வேலையை லகுவாக்குமுகமாகத் தமிழ்ச் சுருக்கெழுத்தில் சுருக்க முறைகளைக் கையாள்வதற்கான புதிய கண்டுபிடிப்புகளைப் புகுத்தும் முயற்சியில் யாழ் தொழில் நுட்பக்கல்லூரித் தமிழ்ச்சுருக்கெழுத்து விரிவுரையாளர் திரு சி. இராமலிங்கம் ஈடுபட்டுள்ளார்.

# ஜி. சி. ஈ. எண்கணித பரீட்சை இன்று நடைபெறமாட்டாது

## வினுத்தாள் வெளியாகிவிட்டது

### ஏனைய பாடங்கள் தொடர்ந்து நடக்கும்

கோட்டை, திங்கள்

**இன்று நடைபெறவிருந்த ஜி. சி. ஈ. சாதாரண எண்கணிதப் பரீட்சை நடைபெறமாட்டாது. இப்பரீட்சை ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது**

எண்கணித வினுத்தாள்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டதாக குற்றவியல் புலன்விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து இப்பரீட்சை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. புதிய வினுத்தாள்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் எண்கணிதப் பரீட்சை நடாத்தப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

ஏனைய பாடங்கள் நிர்ணயிக்கப்பட்டபடி நடைபெறும் என்றும், எண்கணிதத்துக்கான பரீட்சையின் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எண்கணித வினுத்தாள்கள் கொழும்பில் ஏற்கனவே வெளியாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்ட புகார் சம்பந்தமாக விசாரணைசெய்த குற்றவியல் புலன்விசாரணைக் குழுவினர் இதுசம்பந்தமாகப் பலரை விசாரணை செய்தபின்னர் தங்கள் அறிக்கையை நேற்றுக்காலை கல்வியமைச்சிடம்சமர்ப்பித்ததாகத் தெரிகிறது. இது சம்பந்தமாகக் கொழும்பில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும்தெரியவருகிறது. புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

## 'இப்போதைக்கு தேர்தல் நடைபெறமாட்டாது'

### — பிரதமர் இந்திரா

புதுடில்லி டிச 20

சூழ்நிலையை பொறுத்தே அடுத்த பொதுத் தேர்தல் நடாத்துவது பற்றி ஆராயப்படும் இப்போதைக்கு அப்படியான நிலைமையேற்படாது என்று இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று காங்கிரஸ் பாரிலிமென்ட்டறிக் குழுமுன் பேசுகையில் கூறினர்.

மகாராஜாக்களின்ராஜமான்யத்தை நிறுத்துவதென்ற தீர்மானத்துக்கு எதிராகநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை தொடர்ந்து திருமதி இந்திராகாந்தி அடுத்தபொதுத் தேர்தலை நடாத்தும்படி ஜனாதிபதியை கேட்கலாமென்ற ஹேஷ்யங்கள் அடிபடுகின்றன

இது சம்பந்தமாக திருமதி இந்திரா காந்தி [illegible]

## உப்பள ஊழியர் வேலைக்குத்திரும்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்

ஞாயிறவு உப்பளத்தில் கடந்த இருவாரமாக வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் இன்று வேலைக்கு திரும்புகின்றனர்.

இம்மாதம் [illegible] கிகம் ஏற்பட்ட வேலைநிறுத்

# தோட்டப்பகுதி மாணவரும் நகர்ப்புறப் பாடசாலைகளும்

ஹட்டன், ஞாயிறு

தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகள் 5-ம் வகுப்பு வரை தோட்டப் பாடசாலைகளிலேயே கல்வி கற்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றனர். நகர்ப்புற பாடசாலைகளில் தோட்டங்களில் வதியும் பிள்ளைகள் 6-ம் வகுப்பிற்கும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

நடப்பு ஆண்டில் ஜனதா கமிட்டிகள் மூலமாக பிள்ளைகள் நகர்ப்பகுதிப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சமயமும் இந்நியதியே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர்கழக பொதுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தோட்டப் பாடசாலைகளில் 5-ம் வகுப்பு வரை மட்டுமே கல்வி போதிக்கப்படுகிறது. எனினும் தோட்டங்களில் தொழில் புரியும் சில பெற்றோர்கள் தோட்டப் பாடசாலைகளை விரும்புவதில்லை. பணச் செலவுகள் போன்ற பிரச்னைகளைப் பொருட்படுத்தாது தங்களின் பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுகின்றனர். எனினும் 5-ம் வகுப்பிற்குக் குறைந்த வகுப்புகளுக்கு தொழிலாளர்களின் பிள்ளைகள் அநேகமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை ஆனால் தோட்டங்களில் தொழில் செய்யும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் விஷயத்தில் இந்நியதி கடைப்பிடிக்கப்படுவதில்லை என்றே கூற வேண்டும். தோட்டத் துரை, கிளார்க், டீமேக்கர், டிஸ்பென்சரி, கணக்கப்பிள்ளை போன்ற உத்தியோகங்களை வகிப்பவர்களின் பிள்ளைகள் எந்த தோட்டப்பாடசாலையிலாவது படிக்கிருர்களா?

பாடசாலை ஜனதாகமிட்டிகளும் கூட நடப்பு ஆண்டில் பிள்ளைகளை பாடசாலைக்குச் சேர்க்கும்விஷயத்தில் இந்தப் பாகுபாடுகளை செய்திருப்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் 5-ம் வகுப்பு வரை தோட்டப் பாடசாலைகளிலே பயில வேண்டுமென வற்புறுத்தப்படும் அதே வேளையில் தோட்ட உத்தியோகத்தர்களின் பிள்ளைகளின் விஷயத்தில் இந்த கட்டாய நியதி கடைப்பிடிக்கப்படுவதில்லை.

கல்வி இலாகா இவ்விஷயத்தில் நீதியை நிலைநாட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

வடபகுதியில்

# ராணுவத்தை ஏமாற்றி கள்ளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திவைக்கப் பட்டுள்ளது. புதிய வினாத்தாள்கள் தயாாக்கப்பட்ட பின்னர் எண் கணிதப் பரீட்சை நடாத்தப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

ஏனைய பாடங்கள் நிர்ண ... பட்டது.

எண்கணித வினாத்தாள் கள் கொழும்பில் ஏற்கனவே வெளியாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்ட புகார் சம்பந்தமாக விசாரணைசெய்த குற்றவியல் புலன்விசாரணைக் குழுவினர் இதுசம்பந்த சம்பந்தமாகச் கொழும்பில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும்தெரியவருகிறது. புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

... ஈயிறவு உப்பளத்தில் கடந்த இருவாரமாக வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் இன்று வேலைக்கு திரும்புகின்றனர்.

இம்மாதம் 6ந்திகதிதொடக்கம் ஏற்பட்ட வேலைநிறுத்தம் திரு. ஏ விஸ்வநாதன், திரு வீ ஞானசங்கரி ஆகியோரின் சமரசப்பேச்சின் மூலம் கடந்த 17-ந் திகதி தீர்த்துவைக்கப்பட்டது.

[கு வி ம]

... துத் தேர்தலை நடாத்தும்படி ஜனாதிபதியை கேட்கலாமென்ற ஹேஷ்யங்கள் அடிபடுகின்றன

இது சம்பந்தமாக திருமதி இந்திரா காந்தி தெரிவிக்கையில், அடுத்த பொதுத் தேர்தலை இப்போதைக்கு நடத்த வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும் கூறினார்.

# ஆயிரக்கணக்கான நெல் வயல்கள் நோயால் பாதிப்பு

பூநகரி, ஞாயிறு

பூநகரிப் பகுதியிலுள்ள நெல்வயல்கள் புதுவித நோயால் பாதிக்கப்பட்டுள்ளன இதனால் விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

பச்சைப்பசேலென்று காட்சியளித்த நெற்பயிர்கள் எல்லாம் நுனிப்பாகத்தால் கருகிவைக்கோலாகக்காணப்படுகிறது. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நெல் வயல்கள் இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. காவோலை நோய் என்று சொல்லப்படும் இந்நோயை மாற்றுவதற்காக புதுவித மருந்துகளையும் கிருமிநாசினிகளையும் வயல்களுக்குஅடிப்பதில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்,

## "ஓய்வுபெறுவோரின் பிள்ளைகளுக்கு முதலிடம் தருக"

நல்லூர், ஞாயிறு

55 வயதில் கட்டாய ஓய்வு பெறும் ஆசிரியர்களுடைய பிள்ளைகள் பட்டதாரிகளாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஆசிரியர் நியமனத்தில் முதலிடம் வழங்குமாறு பல பெற்றோர்கள் நிதி அமைச்சரிடமும், கல்வி அமைச்சரிடமும், கோரியுள்ளனர். கட்டாய ஓய்வினால் பாதிக்கப்படும் பல குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்குமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.

"நெல் விவசாயத்தில்

# பழைமை முறைகளே தோல்விக்குக் காரணம்"

முசலி, ஞாயிறு

எமது நாட்டிலுள்ள ஏழை விவசாயிகள் தங்கள் பரம்பரை பரம்பரையான விவசாய முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்கின்ற காரணத்தால்தான் அவர்கள் தாங்கள் எதிர்பார்த்த நல்ல விளைச்சலைப் பெறமுடியாத நிலையில் இருக்கின்றார்கள். இந்த நாட்டிலுள்ள விவசாயிகள் நவீனமுறை விவசாயத்தைக் கொள்ளவேண்டும். இரசாயன உரமிடுதல், கிருமிநாசினிகளைப் பாவித்தல், களைகொல்லி, பங்கசு கொல்லி முதலிய வற்றைத் தகுந்தமுறையில் பாவித்து விவசாயத்தைச் செய்வார்களாயின், கட்டாயம் எமது மாவட்டம் ஏனைய மாவட்டத்திலும் பார்க்க விவசாயத் துறையில் முன்னேற்றமடையும்'

இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம் என்னும் விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசிய மன்னார் அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை சுதிர்காமநாதன் கூறினர்.

விவசாய இலாகாவினால் நடத்தப்பட்டு வரும் இந்தப் பயிற்சி வகுப்புக்கு மன்னார் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் ஜனாப் எம். சி. எம். முஸ்தப்பா தலைமை வகித்தார்.

இந்த விவசாய வகுப்பு மன்னார் மாவட்டத்தில் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட குள அதிகாரிகள், காணி அபிவிருத்தி அதிமேற்பார்வையாளர்கள், விவசாய போதனாசிரியர்கள் பகுதிக்கமத்தொழில் உத்தியோகத்தர்கள் சமுகமளித்திருந்தனர். மன்னார் மாவட்ட தலைமைப்பீட விவசாயப்போதனாசிரியர்கள் திரு. எஸ். பத்மநாதன், திரு ரி. லிங்கநாதபிள்ளை ஆகியோர் வகுப்புகளை நடாத்தினர்.

## அமைச்சரைச் சந்திக்க விருப்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர் சங்க யாழ்கிளை வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கும் வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி, இலங்கரத்னவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த அனுமதிகோரியுள்ளது.

மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு ஊழியர்களின் முக்கிய கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதே இந்த பேச்சுவார்த்தையின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில்குடிசன மதிப்பீடு

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தில் 1971-ம் ஆண்டு குடிசன மதிப்பு பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இதில் ஈடுபடும்ஊழியர்களுக்கான போதனவகுப்பு மன்னார்காரியாதிகாரிகாரியாலயத்திலும், பட்டினசபையிலும், முசலிக் காரியாதிகாரி காரியாலயத்திலும் மாந்தைக்காரியாதிகாரி காரியாலயத்திலும் நடைபெற்றன.

இதற்கான ஆக்கவேலைகளை மன்னார் மாவட்ட புள்ளிவிபர இலாகா உத்தியோகஸ்தர் திரு. பி. எம். செல்லத்துரை கவனித்து வருகின்றார்.

## எவ்வளவு செலவு செய்தாலும் தகும்

கோட்டை, ஞாயிறு

சந்திரனை பற்றிய விபரமான தகவல்கள் அறிவதில் எத்தனை லட்சம் ரூபா செலவளித்தாலும் தகும் என இலங்கையின் பிரபல விஞ்ஞானி டாக்டர் பொன்னம்பெருமா கருத்து தெரிவித்துள்ளார்.

## ஜனவரி 9க்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவை ஆலய தேர் தீவைப்பு வழக்கு அடுத்த மாதம் 9-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எஸ் ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிகள் சார்பு வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் நீதிமன்றத்துக்கு வர முடியாது என மனு சமர்ப்பிக்கப் பட்டதை யடுத்து நீதிபதி அடுத்த மாதம் 9-ந் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்

கண்டி மகியங்கனை

# வீதியிலே பஸ்விபத்து!

## ஒருவர் மரணம்; 47 பேர் படுகாயம்

கண்டி, ஞாயிறு

மகியங்கனையிலிருந்து கண்டியை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் ஒன்று வீதியிலிருந்து விலகி பள்ளத்தாக்கில் விழுந்ததமையால் பஸ்கண்டக்டர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

பஸ்ஸில் பிரயாணம் செய்த 47 பேர் படுகாயமடைந்து கண்டி, தெல்தெனியாவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்விபத்தின்போது மூன்றுசிறுவர்கள்மட்டுமே எதுவித காயமுமின்றி தப்பினர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

# 'வடபகுதி துறைமுக லிகிதர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்'

## காங்கேசன்துறை ப.ச தலைவர் உதவி அமைச்சரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அரசாங்கத்தினால் வடபகுதித் துறைமுகங்களுக்கென திசைதிருப்பப்படும் உணவுக் கப்பல்கள் துரிதமாக உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்வதால், பெரும்தொகையான பணத்தை அரசாங்கம் அந்நியச் செலாவணி பெற்று இலாபம் அடைந்திருக்கிறது ஆனால் இதற்குப் பிரதிபலனாக அரசாங்கம் வடபகுதித் துறைமுகத்தொழிலாளர்களுக்கும் லிகிதர்களுக்கும் வழங்க வேண்டிய சலுகைகளைசெய்யத்தவறிவிட்டது இதற்கு முதற்படியாக, லிகிதர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்."

கப்பல் போக்கு வரத்து உல்லாசப் பிரயாண உதவி அமைச்சர் திரு. டி பி விக்கிரமசிங்காவுக்கு வடமாகாண துறைமுக லிகிதர்கள் சங்கம் அளித்த வரவேற்பின் போது காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவரும், கப்பல் ஏஜெண்டுமான திரு. கே. ஜெயபாலசிங்கம் ஜே. பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ஜெயபாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'வடபகுதிக்கு ஒரு மாதத்தில் சராசரி ஒரு கப்பல்தான் அனுப்பப்படுகிறது இதனால் துறைமுகத் தொழிலாளர் போதிய வேதனம் பெறமுடியாமல் இருக்கின்றனர் அவர்கள் அரசாங்கத்திற்கு மிகவும் கண்ணியமான முறையில் அதிக இலாபத்துடன் உழைத்துக்கொடுக்கிறார்கள் ஆகையால் தொழிலாளர்களின் நன்மையைக்கருதி ஒரு மாதத்தில் இரு கப்பல்கள் வடபகுதிக்கு திசை திருப்பப்படவேண்டும். இதனால் தொழிலாளர்கள் மட்டுமல்ல, அரசாங்கமும்நன்மை பெறும்"

'வடமாகாணத்தில் போதிய உணவுப் பண்டகசாலைகள் இல்லாததால், சில சமயங்களில் கப்பல் இறக்குமதி வேலைகள் கட்டுப்படுத்தப்படுகிறது இக்கஷ்டம் நீங்க போதிய பண்டகசாலைகளை வடபகுதியில் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்' எனவும் கூறினார்.

உதவி அமைச்சர் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், லிகிதர்களின் கஷ்டங்களை தான் விளங்கிக் கொள்வதாகவும், அவர்களின் கஷ்டங்களை போக்க தன்னால் இயன்றளவு ஒத்துழைப்பதாகவும் கூறினார்.

கூட்டத்திற்கு திரு. எஸ். திருச்செல்வம் தலைமைவகித்தார். திரு. குலசிங்கம், கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் திரு வி. பொன்னம்பலம் ஆகியோரும் பேசினர்.

வடபகுதித் துறைமுக லிகிதர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமெனக் கோரும் ஒரு மகஜரையும் சங்க அங்கத்தவர் திரு. எஸ் சித்திரவேல் மூலம் உதவி அமைச்சரிடம் சமர்ப்பித்தனர்.

வடபகுதியில்

# ராணுவத்தை ஏமாற்றி கள்ளக் கடத்தல் நடக்கிறதாம்

கோட்டை, ஞாயிறு

இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்கள் அல்லது ஏராளமான கள்ளக் குடியேற்றக்காரர்கள் கரையிறங்குவதற்கு 'அதோ இதோ' வென்று இருக்கும் சந்தர்ப்பங்களில் இதுபற்றிய தகவல் ராணுவத்தினருக்கு கிடைத்து விடாமல் தடுப்பதற்காக வடபகுதியில் வேறு குழப்பங்களைத் தூண்டி விடும் இயக்கமொன்று பற்றிய விஷயங்கள் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உப அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி நடத்திய பரிசோதனையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம், இம்மாதிரி குழப்பங்களுக்கு சமஷ்டிக் கட்சியின் சில பிரமுகர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமான தகவல்கள் திரு. ஜயக்கொடிக்கு கிடைத்திருக்கின்றனவாம்.

'றிவிரெஸ' பத்திரிகை நேற்று இச்செய்தியை வெளியிட்டிருந்தது.

இவ்வாறு குழப்பங்கள் ஏற்பட்டதும் அதனை அடக்குவதற்குபொலிசாரும் ராணுவமும் அந்த இடங்களுக்குப் போனதும் மறுபுறத்தில் கள்ளச் சாமன்களை இறக்குவதும்கள்ளக் குடியேற்றக்காரர்களை இந்நாட்டிற்குள் கொண்டுவ வதும் மிக சுலபமாக நடைபெறுமாம் இந்தத் திட்டத்தின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு கள்ளக்கடத்தலும் கள்ளக்குடியேற்றக் காரர் வருவதும் நடைபெறுகிறதாம் இந்தமுறையில் தங்கம் வெள்ளி முத்து, இரத்தினம் போன்றவை அதிகமாக இந்தியாவுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் இந்தியாவிலிருந்து கள்ளச்சாமான் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம்.

இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு அப்படியான குழப்பங்களைக் கலனிப்பதற்கெனதனியாக பொலிசாரையும் ராணுவத்தையும் நிறுத்த உதவி அமைச்சர் முடிவு செய்திருக்கிறாராம் இதனால் எவ்வளவுபெரிய குழப்பம் நடைபெற்றாலும் கள்ளக்கடத்தலையும் கள்ளக் குடியேற்றக் காரரையும் பிடிப்பதற்காக நிறுத்தப் பட்ட ராணுவத்தினர் தமது இடங்களை விட்டுப்போக மாட்டார்களாம்.

இதேசமயம் கள்ளக்கடத்தலும்கள்ளக்குடியேற்றமும் நடைபெறுவதற்கு மீன்பிடி வள்ளங்கள் உபயோகப்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் இதனைத்தடுக்க மீன்பிடி படகுகளுக்கு அவைசேர்ந்த பகுதியைக் குறிக்கும் ஏதாவது மை பூசுவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது இதுமிக விரைவில் நடைமுறைக்குவருமாம்.

## ஸ்ரீ.ல.சு. கட்சி யாழ். கிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகம் சாதிசமய இனபேதமற்ற முறையில் இயங்க வேண்டுமென்ற தீர்மானம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைக்காரியக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

நேற்று நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு, அல்பிறட் துரையப்பா எம் எம் சி தலைமை வகித்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்களான ஜனாப் காதர், ஜனாப் பஜீர் ஆகியோர்கள பேசும் போது

(4-ம் பக்கம் பார்க்க)


## மரண அறிவித்தல்

அருணாசலம் - விஜயரத்தினம்

ஓய்வுபெற்ற பொலிஸ் இலாகா பிரதம லிகிதரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் வி. சிவசுப்பிரமணியத்தின் தகப்பனாரும், சரோஜினிதேவியின் மாமனாரும், சிற்சபேசனின் பேரனுமாகிய அருணாசலம் விஜயரத்தினம் காலமாகி விட்டார்.

அன்னாரது பூதவுடல் சமக்கிரியைக்காக திங்கட் கிழமை (21-12-70) பிற்பகல் 4 மணியளவில் 17/2 ஐயனார் கோவில் வீதியிலுள்ள (வண்ணை பண்ணை) இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 2164


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### தவறிவிட்டது

ட்றைவிங் லைசென்ஸ்:

செலபின் பேப்பரில் சுற்றியபடி கார் ட்றைவிங் லைசென்ஸ், பதிவுப்பத்திரம் இன்ஸுரன்ஸ் பத்திரம், சவிகள் முதலியன தவறிவிட்டன. கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும். டாக்டர் சிவஞானரத்தினம், சாந்தி நேர்ஸிங் ஹோம், பீச் ரோட், யாழ்ப்பாணம்

2435

### விற்பனைக்கு

லொறி;

24 ஸ்ரீ 2000 தொடர் இலக்கமுள்ள. பக்கம் மூடப்பட்ட டொஜ் லொறி மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. பத்துத்தொன் பாரம் ஏற்றக்கூடியதும் 23,000 மைல் செல்லக்கூடியதும், தனிப் பாவிப்பிலுமுள்ளது. பார்வையிட்டுப் பெறலாம். 17, அல்பிறெட் பிளேஸ், கொழும்பு-3.

2587


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 21—12—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 விளையாட்டு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா —அசோகன் நடித்த

**மாட்டுக்கார வேலன்**

மனோஹரா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்

★ என். டி. ராமராவ்

★ கே. ஆர். விஜயா

ஜோதிலட்சுமி ★ ராஜஸ்ரீ

நடித்த

**லக்ஷ்மி கடாட்ஷம்**

(பாஸ்கள், சலுகைகள் ரத்து)

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ ராஜன் ★ ரவிச்சந்திரன்

★ லட்சுமி

★ நிர்மலா

★ நாகேஷ்

**என்?**


# தொழில் நுட்ப மாணவருக்கு பயிலும்பொழுதே வேலைவாய்ப்பு

கோட்டை, ஞாயிறு

தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவர்களுக்கு நல்ல தொரு வாய்ப்புக் கிடைக்கவிருக்கிறது இவர்கள் பயின்றுகொண்டிருக்கும் போதே வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வசதிகளை அரசாங்கம் செய்யவிருக்கிறது.

கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும், கூட்டுத்தாபனங்கள் சபைகளைச் சேர்ந்த 49 உயர் அதிகாரிகளும், வேறு 4 அமைச்சுக்களைச் சேர்ந்த நிரந்தரக் காரியதரிசிகளும் கலந்துகொண்ட மகாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தொழில்நுட்ப மாணவர்கள் செய்யும் வேலைத்தரத்தைப் பொறுத்து இவர்களுக்கு மாத அலவன்ஸ் வழங்கப்படும். நாடுபூராவுமுள்ள சகல தொழில்நுட்பக் கல்லூரிகளில் தற்போது பயின்றுகொண்டிருக்கும் மாணவர்கள் விரைவில் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், வேலைத்தளங்கள் ஆகியவற்றில் நியமிக்கப்படுவர்.

## கலாசார அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்தியா - இலங்கை இருநாடுகளும் பல்லாண்டுகாலமாக கலைகலாச்சாரத்தினால் இணைந்துள்ளன. புனித ஸ்தலங்களை அடியார்கள் சென்று தரிசிக்க எந்தவித கஷ்டங்களையும் ஏற்படுத்தவேண்டாம், பக்தியின் வசப்படும் எவரும் சாதி, சமயம், மொழி இனம் என்று பாரபட்சமின்றி செல்ல அனுமதிக்க வேண்டும்.

சைவமக்களைப் பொறுத்தவரை தென்னிந்தியாவில் உள்ள தலங்கள் யாத்திரைக்கு முக்கியமானவை எமது புனித யாத்திரைக்கு வழி செய்து தரவேண்டும் என மீசாலை பக்தி நெறிக் கழகம், கலைகலாச்சார அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளது. (குவிம)

## விளையாட்டுத்துறையில் பல வீரரை உருவாக்கியவர்



திரு ஜோன் முருகுப் பிள்ளை செல்வதுரை கல்வித் துறையில் முன்னோடிகளாக விளங்கிய அறிஞர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் நீண்டகாலச் சேவைக்குப்பின் இவ்வாண்டு மார்கழி மாதம் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து ஒய்வுபெறுகிறார்.

அவர் யாழ்ப்பாணம இளைஞர் கழகத்தின் தாபகரும் தலைவரும் ஆவார். அவருடைய உற்சாகத்தோடு கூடிய உழைப்பினால் அக்கழகம் 1947-ம் ஆண்டுமுதல் 1963ம் ஆண்டுவரை வெற்றிக்குமேல் வெற்றியீட்டியது இலங்கையின் வடபாகத்தில் விளையாட்டுப் போட்டிகளிலும் உதைபந்தாட்டத்திலும் கூடைப்பந்தாட்டத்திலும் அநேக வெற்றிவீரரை உருவாக்கிய பெருமை அக்கழகத்துக்கு உரியது. ஒலிம்பிக்புகழ் எதிர்வீரசிங்கம் ஓட்டவீரன் உபாலி குணரத்தின, தடைப்பாய்ச்சல் வீரன் வி.ரி.ஜெயரத்தினசிங்கம் குண்டெறிவீரன் டேவிட் தம்பையா ஆகியோரையும் இன்னும் பல விளையாட்டு வீரரையும் இக் கழகம்உருவாக்கியது.

உடல்நிலை குன்றியதன் காரணமாக திரு ஜே. எம். செல்வதுரை 1964-ம் ஆண்டு விளையாட்டுத்துறையிலிருந்து ஒய்வுபெறவேண்டியவரானார்.

திரு ஜே எம். செல்வதுரையின் ஆர்வத்தினாலும் அயரா உழைப்பினாலுமே ஆண்டுதோறும் யாழ் மத்திய கல்லூரிக்கும் புனித யோவான் கல்லூரிக்குமிடையே நிகழ்ந்துவரும் கிரிக்கெட் போட்டி 1946-ம் ஆண்டுமுதல் வட இலங்கையில் பெரியதோர் விளையாட்டு வைபவமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அவர் புனிதயோவான் கல்லூரியின்பழைய மாணவராவர். அங்கே அவர் கல்வி பயிலும் நாட்களில் பாடத்துக்குப் புறம்பான எல்லாத் துறைகளிலும் முக்கிய பங்குடையவராக விளங்கி சிறந்த சாரணராகவும் கடேற்றாகவும் இருந்து வந்தார். அக் கல்லூரியின்கிரிக்கெட் கோஷ்டியிலும் உதைபந்தாட்டக் கோஷ்டியிலும் அவர் சிறந்ததொரு விளையாட்டு வீரராகவும் விளங்கினார் ஏனைய விளையாட்டுகளிலும் முதன்மை வகித்து வந்தார்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது இராணுவப்படையில் சிவில் உத்தியோகஸ்தராகக் கடமையாற்றினார். பின்பு வவுனியா மாவட்டத்தில் ஒரு பிரிவுக்கு விவாகப்பதிவாளராக நியமிக்கப்பட்டார்.

யாழ். மத்திய கல்லூரியில் நூல்நிலைய அதிபராகவும். மாணவர் விடுதிக்கு உப மேற்பார்வையாளராகவும், உதைபந்தாட்டத்தினதும். கிறிக்கெற்றினதும் இரண்டாம் பிரிவுக்கோஷ்டிகளைப் பயிற்றும் விளையாட்டு ஆசிரியராகவும், லிகிதராகவும் பணிபுரிந்துவந்தார்.

வன்னிப்பிரதேசத்திலுள்ள தனியூற்று என்னும் கிராமத்தில் பிறந்த திரு. ஜே எம். செல்வத்துரை ஆனைப்பந்தியடி மெதடிஸ்ற் மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரியை கிறேஸ் முத்தம்மாவை மணம்புரிந்து இல்லறம் இனிது நடாத்திவருகின்றார்.

அரசாங்க சேவையிலிருந்து ஒய்வுபெற்றதும் அவர் சமூகசேவையில் மேலும் ஈடுபட்டு மக்களுக்குப்பல பணிகளைப் புரிவார் என்பது திண்ணம்.

— அபிமானி

# செய்திச் சுருக்கம்

### கூட்டுத்தாபனம் மறுப்பு

நல்லூர், ஞாயிறு

இரணைதீவு இறங்குதுறை வேலைகள் அத்தனை பெரிய வேலையல்ல எனக் கூறி அதனைப் பொறுப்பேற்க அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபனம் மறுப்புத் தெரிவித்துள்ளது. நெடுஞ்சாலைகள் திணைக்களத்திடம் இவ் வேலைகளை ஒப்படைப்பதற்கான முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நல்லூருடன் இணைக்கவும்

கோப்பாய்க் கிராமசபையின் 15ம் வட்டாரத்தை நல்லூர்க் கிராமசபையுடன் இணைக்குமாறு கோரி வட்டாரப் பொதுமக்கள் பலர் உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

### எம், பி.க்கு மகஜர்

வசாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாசாலையில் கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவரும் இடநெருக்கடி மற்றும் தளவாடப் பற்றுக்குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி, பாடசாலைத் தலைமை ஆசிரியர் கோப்பாய் எம் பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையைக் கேட்டுள்ளார்.

### அச்சுவேலி கி, மு. சங்கம்

அச்சுவேலி கி. மு. சங்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் செயல்படாமல் இருப்பதாகவும், இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும் சங்க உறுப்பினர் பலர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளனர். சங்கத்தின் திறப்பை வழங்க மறுப்பதாகக் கல்வியதிபதிக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### பாதையைத் தடுக்கின்றனராம்

நீர்வேலிக் கிராமசபையின் முதலாம் வட்டாரத்தில் உள்ள பன்னாலை என்னும் இடத்தில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழர் உபயோகிக்கும் பாதையைச் சிலர் தடுப்பதாகவும் கிராமசபையினால் அமைக்கப்பட்ட இந்த ஒழுங்கையைத் தாங்கள் உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அப்பகுதி மக்கள், தொகுதி எம் பி யிடம் முறையிட்டுள்ளனர்.

### தேர்தல்கள்

இம்மாத முடிவிற்குள் 5 உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல்கள் நடத்தப்படவிருக்கின்றன. காரைதீவு வடக்குக் கிராமசபை 23ந் திகதியும், உடுப்பிட்டிக் கிராமசபை 26ந் திகதியும், காரைதீவு தெற்குக் கிராமசபை 28ந் திகதியும். கரைச்சிக் கிராமசபை 29ந் திகதியும், புலோலிக் கிராமசபை 30ந் திகதியும் தேர்தல்கள் நடக்கும்.

### கோரிக்கை நிராகரிப்பு

யாழ் கனிஷ்ட தொழில்நுட்ப நிலையத்தின் ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான போதனை இனத்தைப் பயில்வதற்கு பிரவேச பரீட்சையின்றி மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை துணைக்கல்வி அதிபர் ... நிராகரித்துள்ளார். திரு. சில்வா இதுசம்பந்தமாக திரு. எஸ். கதிரவே...

# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

### திருமதி அன்னமுத்து

கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் தொடர்ந்து 36 வருடங்களாக உதவியாசிரியையாகக் கடமையாற்றுபவர் திருமதி அன்னமுத்து. தொடர்ந்து உடுப்பிட்டிக் கிராமத்தில் இவர் 36 வருடகாலம் சேவையாற்றியதால் இப்பாடசாலைக்கும் கிராமத்துக்கும் சிறந்த பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### திரு. ஐயாத்துரை

அறிவு வளர்ச்சியாலன்றி வேறு எந்த வளர்ச்சியாலும் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்ய இயலாது என்ற கொள்கையை உறுதியாகக் கொண்ட திரு. ஐயாத்துரை தனங்களப்பு அ. த. க. பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரிபவர். விளையாட்டு, இசை ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடுடைய இவர் இவற்றை மாணவர் ...

### திரு. க. ஆறுமுகம்
### திரு. வை. தம்பிராசா
### திரு. க. கனகசபை
### திரு. வீ கொலின் இரத்தினசிங்கம்
### திருமதி எட்வேட் தங்கரத்தினம்

இவர்கள் யாவரும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள். 26 வருடங்களுக்கு மேலாக ஆசிரியப்பணியில் ஈடுபட்ட இவர்கள் இக்கல்லூரிக்குச் செய்தசேவை அளப்பரியது. இவர்கள் யாவரும் ஒரே நேரத்தில் ஒய்வுபெறுவது இக்கல்லூரிக்குப் பேரிழப்பாகும்.

— —

உடுப்பிட்டி, ஞாயிறு

அல்வாய் உபதபாற்கந்தோர் அதிபர் திரு. எஸ். மகேஸ்வரன் இம்மாத இறுதியுடன் ஒய்வு பெறுகிறார். புதிய உபதபாலதிபர் நியமனம் செய்யப்படும்.


நத்தார் - புதுவருட பண்டிகையை

முன்னிட்டு

விசேஷமாக

வரவழைக்கப்பட்ட

★ அப்பலோ டெங்ரோன் சேட்

★ றெக் & றேல் சேட்

★ கெப்ஸ்டன்ஸ் சேட்

★ டயா எஸ்டர் சேட்

★ வெலெக்ஸ் செக் சேட்

வகைகள்

மிக மிக மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ ராஜன் ★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
நடித்த

# என்?

யாழ். வின்ஸர், றீகல்
தியேட்டர்களில்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு எல்லாக் காட்சிகளிலும்
காண்பிக்கப்படுகின்றது

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ



முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்

## கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


### அச்சுவேலி கி. மு. சங்கம்

அச்சுவேலி கி. மு. சங்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் செயல்படாமல் இருப்பதாகவும், இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும் சங்க உறுப்பினர் பலர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் புகார்செய்துள்ளனர்.

### அரசாங்க அதிபர் ஏற்பாடு

யாழ். மாவட்ட இணைப்புக்குழு, விவசாய ஆலோசனைக்குழு என்பனவற்றின் கூட்டங்களை ஜனவரி மாதத்தில் நடாத்துவதற்கு யாழ் அரசாங்க அதிபர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

### புகார்

யாழ்ப்பாண இசை அபிவிருத்திக் கழகம் போயா நாட்களில் சங்கீத வகுப்புக்களை நடத்துவதற்கு வடமாநிலவித்தியாதிபதி, செட்டித்தெரு மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தை உபயோகப்படுத்த அனுமதியளித்துள்ளபோதிலும் மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் சங்கீத வகுப்புக்களை நடத்துவதற்குப் பாடசாலைத்

...எந்திரவியல் விஞ்ஞான போதனை இனத்தைப் பயில்வதற்கு பிரவேச பரீட்சையின்றி மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை துணைக்கல்வி மா அதிபர் எஸ் எல். டி. சில்வா நிராகரித்துள்ளார். திரு. சில்வா இதுசம்பந்தமாக திரு. எஸ் கதிரவேல் பிள்ளை எம் பி க்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரவேசப் பரீட்சையின்றி மாணவர்களை அனுமதிக்கமுடியாமல் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

### அதிருப்தி

வண்ணை வடகிழக்கு சனசமூக நிலைய வாசிகசாலை கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் மூடப்பட்டிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர். அரசியல் குரோதமே வாசிகசாலை மூடப்பட்டிருப்பதற்கு காரணமெனக் கூறப்படுகிறது.

### இலங்கைக் கூப்பன் வழங்கவும்

1967ம் ஆண்டு போதிய அத்தாட்சிகள் காட்டி வாக்காளராகப் பதிவுசெய்து கொண்டவர்களுக்குத் தொடர்ந்தும் பேர்மிட் அரிசி தான் வழங்கப்படுவதாக தர்மபுரம் கிராமமுன்னேற்றச் சங்கம் புகார் தெரிவித்துள்ளது. இவர்களுக்கு இலங்கைக் கூப்பன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மேலும் வேண்டியுள்ளது.

### சுருட்டுத் தொழிலாளர் அச்சம்

அரசாங்கத்தின் உற்பத்தி வரித் திட்டத்தினால் சுருட்டுத் தொழில் அதிபர்கள் தொழிலாளரின் வேலை நாட்களை மட்டுப்படுத்திவருவதினால் தொழிலாளர்கள் தமது வேலைவாய்ப்பை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளதாம். உற்பத்தி வரித் திட்டத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் தமது எதிர்காலம்குறித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவென இம்மாதம் 19ந் திகதி உடுவிலில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது.

......

### சிரமதானம்

கிளிநொச்சி, ஞாயிறு கரடிப்போக்கு - உருத்திரபுரம் வீதியில் தூர்ந்தமதகுகள் வீதிகளைச் செப்பனிடும் வேலைகளை சிரமதான மூலம் இங்குள்ள வாலிபர்கள்செய்தனர், திரு.வி. ஞானசங்கரி தலைமையில் இச் சிரமதான வேலைகள் நடைபெற்றன.


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா 4 காட்சிகள்
ஹாமினி— அனுலா
நடித்த
**ருன கிரே**
(சிங்களம்)

**வெஸ்லிசினிமா**
மாஸிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**நவராத்திரி**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
**தங்கை**

**REGAL**
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m,
Poya days 4 shows
David Niven
in
PRUDENCE & THE PILL
(Color)


...லும் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்ய இயலாது என்ற கொள்கையை உறுதியாகக் கொண்ட திரு. பாத்துரை தனங்களப்பு அ. த க. பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரிபவர். விளையாட்டு, இசை ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடுடைய இவர் இவற்றை மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதில் மிகுந்த சிரத்தை கொண்டு விளங்கினர். மிகுந்த சமயப்பற்று உள்ள இவ்வாசிரியர் மாணவர்களை இறைவழிபாட்டிலும் ஈடுபடச் செய்தார். தென்மராட்சி ஆசிரியர் சங்கத்திலும், கூட்டுறவுச் சங்கத்திலும், இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் அபாயத் தடுப்புகளிலும் பங்கு கொண்டு உழைத்தார். கடந்த 40 வருட காலமாக ஆசிரியப் பணியாற்றி வரும் இவர் செய்த சேவை அளப்பரியது.

0 0 0

### பண்டிதர் வேலுப்பிள்ளை

பண்டிதர் வேலுப்பிள்ளை சோரன்பற்று கணேச வித்தியாசாலையில் கடமையாற்றும் ஆசிரியராவார். மிகுந்த பொறுப்புணர்ச்சியும் ஆற்றலும் மிக்க இவர் இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்காக அயராது அல்லும் பகலும் உழைத்தவர்.

0 0 0

### திரு. பொன்னம்பலம்

திரு. பொன்னம்பலம் பூநகரி அரசினர் பாடசாலையில் கடந்த சில ஆண்டுகளாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறுர் பாடசாலை நிர்வாகத்தில் கூடிய கவனம் எடுத்து நிர்வாகம் சீராக நடைபெற பெரிதும் உதவியவர்.

0 0 0

### திரு வீ ஏ பிலிப்

ஆசிரியனின் சிறப்பான கடமை மூலமே நாட்டில் சிறந்த மாணவச் சமுதாயத்தைச் சிருஷ்டிக்க முடியும் என்னும் நோக்கம் கொண்டு மாணவர் நலனுக்காகத் தன் நேரத்தில் பெரும் பங்கை ஒதுக்கியவர். பரந்தன் இந்து கலவன் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் திரு. வீ. ஏ பிலிப் கிளிநொச்சிப் பகுதிப் பாடசாலைகளின் விருத்திக்காக வித்தியா பகுதியினருடன் ஒத்துழைத்தமைக்கு வித்தியாபகுதி அவருக்கு என்றென்றும் நன்றியுடையதாகவிருக்கும்' என அவரது சேவைநலம் பாராட்டுவிழாவில் கிளிநொச்சிப் பகுதி வித்தியாதரிசி திரு. நா துரைச்சாமி திரு பிலிப்பைப் பாராட்டிக் கூறியதிலிருந்து இவரது சேவையின் திறனைப் பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை.

...நேரத்தில் ஒய்வுபெறுவது இக்கல்லூரிக்குப் பேரிழப்பாகும்.

— —

உடுப்பிட்டி, ஞாயிறு அல்வாய் உபதபாற்கந்தோர் அதிபர் திரு. எஸ். மகேஸ்வரன் இம்மாத இறுதியுடன் ஒய்வு பெறுகிறுர். புதிய உபதபாலதிபர் நியமனம் செய்யப்படும் வரை அவ்விடத்தில் ஒய்வு பெறும உபதபாலதிபரின் மகன் தற்காலிகமாகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.


★ றெக் & றேல்சேப்
★ கெப்ஸ்டன்ஸ் சேப்
★ டயா எஸ்டர் சேப்
★ வெலெக்ஸ் செக் சேப்
வகைகள்
மிக மிக மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.



## டயரும்ஸ்

54 - 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனையாகின்றது

# 'ஈழநாடு' தினக்குறிப்பு 1971

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு
விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
★ போயா விடுமுறைகள்
★ பாடசாலை தவணை விடுமுறைகள்
★ உலக - இலங்கை புவியியல் குடியியல் சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
★ தபால் தந்தி விகிதங்கள்
பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

'ஈழநாடு' (வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமுத்திரத்தில் யு. எஸ். தளம்

# இந்தோனேஷியாவுக்கு கவலை இல்லையாம்

## துன்ரஸாக் கூறுகிறார்

ஜாகர்த்தா, டிச. 20

இந்து சமுத்திரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவுடன் அமெரிக்க ராணுவத் தகவல் தொடர்புத் தளம் ஒன்றை நிறுவ முடிவு செய்திருப்பது குறித்து மலேஷியா கவலைகொள்ளவில்லை.

மலேஷிய பிரதம மந்திரி துன் அப்துல் ரஸாக் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்துசமுத்திரத்தில் இலங்கைக்கும் மொரீஷியஸ் தீவுக்குமிடையில் தகவல் தொடர்புத்தளம் ஒன்றை நிறுவுவதற்கு அமெரிக்கா முடிவுசெய்திருப்பது குறித்து இந்திய அரசாங்கம் ஏற்கனவே ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது. இப்பகுதி அமைதிப் பிரதேசமாகக் கருதப்படவேண்டும் என்றும் வல்லரசுகளின் செடுபிடிக்கு இங்கு இடம்தரலாகாதென்றும் இந்தியா கருதிவருகின்றது.

இப்பகுதியில் அமெரிக்காவும் பிரிட்டனும் தளம் அமைக்கும் பட்சத்தில் சோவியத் யூனியனும் தனது ராணுவ நிலைகளை இங்கு ஸ்திரப்படுத்தமுனையக்கூடும் என்றும் அதனால் இங்கு பதற்றநிலை உருவாகும் என்றும் அஞ்சப்படுகின்றது.

துன் அப்துல்ரஸாக் இந்தோனேஷியாவில் உத்தியோக முறையில் விஜயம் மேற்கொண்டிருக்கிறார். இருநாடுகளுக்குமிடையில் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதுபற்றி இந்தோனேஷிய தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

சீனாவுடனான கருத்துவேறுபாடுகளைத் தீர்த்துக்கொண்டு உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள இந்தோனேஷியா முயற்சியெடுப்பதாகத்தாம் கூறவில்லையென்று துன்அப்துல் ரஸாக் மறுப்புத் தெரிவித்தார்.

செஞ்சீனாவை ஐ. நாவில் சேர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். 60 கோடி மக்களை உதாசீனம்செய்ய முடியாது. அவர்களை தனித்துவிடவும் முடியாது என்றார் துன்ரசாக்.

தென்கிழக்காஸிய நடுநிலைமைக்கு பெரிய வல்லரசுகள் உத்தரவாதமளிக்க வேண்டுமென்ற மலேஷியாவின் கருத்தை தாய்லாந்தும் இந்தோனேஷியாவும் நன்கு புரிந்துகொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆசியாவின் பிரச்னைகளை தீர்த்துக்கொள்வதில் சீனாவும் சேர்ந்துகொண்டால்தான் தென்கிழக்காசியாவில் அமைதி, நோக்கம் நிறைவேறமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

முந்திய பிரதமர் துங் அப்துல் ரகுமானின் கொள்கையிலிருந்து சீன விஷயத்தில் தாம் சற்று வேறுபடுவதாக அவர் கூறினார். சீனாவை ஐ நாவில் சேர்க்கவே என்பது அப்படியான அடிப்படை மாற்றத்தில் ஓர் அம்சம் என்றார் அவர்.

### ஜப்பானுக்கு 74 தங்கப் பதக்கங்கள்

பாங்கொக், டிச. 20

பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் ஜப்பான் 74 தங்கப் பதக்கங்களைப் பெற்று முதல் இடத்தை வகிக்கின்றது 47 வெள்ளிப் பதக்கங்களையும் 23 வெங்கலப் பதக்கங்களையும் ஜப்பான் சுவீகரித்தது.

தென்கொரியா 17 தங்கப்பதக்கங்களைப் பெற்று இரண்டாவது இடத்தைப்பெற்றது 13 வெள்ளிப் பதக்கங்களையும் 23 வெங்கலப்பதக்கங்களையும் தென்கொரியா பெற்றது.

ஈரான் மூன்றும் இடத்தைப்பெற்றது 9 தங்கப் பதக்கங்கள், 7 வெள்ளி, 7 வெங்கலப் பதக்கங்களையும் ஈரான் பெற்றது.

தாய்லாந்து 7 தங்கப் பதக்கங்களையும் 17 வெள்ளி, 13 வெங்கலப் பதக்கங்களையும் பெற்றது. இந்தியா 6 தங்கப் பதக்கங்களையும் 9 வெள்ளி, 9 வெங்கலப்பதக்கங்களையும் பெற்றது. பாகிஸ்தான் ஒரே ஒரு தங்கப் பதக்கத்தைமட்டும் பெற்றது. 2 வெள்ளிப்பதக்கமும் 7 வெங்கலப்பதக்கமும் பாகிஸ்தானுக்கு கிடைத்தன. 13-ம் இடத்தை பாகிஸ்தான் பெற்றது. இலங்கை 10-வது இடத்தைப்பெற்றது.

### கிழங்கு, இஞ்சிச் சோடா பலி எடுத்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

அக்கராயன் குடியேற்றப் பகுதி விவசாயியான காசியர் நாகலிங்கம் (59) என்பவர் மரவள்ளிக்கிழங்குடன் இஞ்சிச்சோடாவை குடித்தாராம் இதனால் அவர் மரணமானதாகக் கூறப்படுகிறது.

காலஞ்சென்றவர் மரவள்ளிக்கிழங்கை அன்றைய தினம் சாப்பிட்டதாகவும் இதனால் ஏற்பட்ட வயிற்று வலிகாரணமாக இஞ்சிச் சோடாவை அருந்தியதாகவும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இறந்தவருக்கு அடிக்கடி வயிற்றுவலி வருவதாகவும் விசாரணையின்போது கூறப்பட்டது. இறந்தவரின் மனைவியும் மகளும் சாட்சியமளித்தனர்.

—— (கு. வி. ம.)

வெசாக்தினத்தன்று

### வேண்டாம்

கோட்டை, ஞாயிறு

அடுத்தவருடம் மேமாதம் 9-ம் திகதியன்று வரும் வெசாக்தினத்தன்று படமாளிகைகளையும் நாடகக் கொட்டகைகளையும் மூடவேண்டுமென பல பௌத்த சங்கங்கள் கலாசார அமைச்சரைக் கேட்டுள்ளன.

'வெசாக்' தினம் ஒருபுனிதமானதினமாகையால், புனிதத்தன்மையுடன் அனுட்டிக்கப்படவேண்டும். இத்தினத்தன்று மதுபானக் கடைகள், தவறணைகள் இறைச்சிக்கடைகள் ஆகியன திறக்கப்படாதது போல் திரைப்படங்களும் இத்தினத்தில் காண்பிக்கப்படலாகாது என்றும், அப்படிக் காட்டுவதாயின் புத்தபகவான் வரலாற்றைச்சித்திரிக்கும் படங்களை மட்டுமே காண்பிக்கவேண்டும் என்றும் அவை கேட்டுள்ளன.

### இடமாற்றம்

ஊரதீவு, ஞாயிறு

ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. க. சி. தருமலிங்கம் நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

ஒட்டுசுட்டான், ஞாயிறு

ஒட்டுசுட்டான் ஓட்டுக் கைத்தொழில் கூட்டு ஸ்தாபனத்தில் பிரதம மேற்பார்வையாளராகக் கடமை புரிந்த திரு. தோமாஸ் இம்மாதம் 10-ந் திகதி தொடக்கம் பங்கதெனியா ஓட்டுத் தொழிற்சாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

0 0 0

நெடுங்கேணி பிரிவுக் காரியாதிகாரி அலுவலகத்தில் கடந்த ஐந்து வருடகாலமாக பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு என். வேல்தாசன் கொழும்பு சுகாதார அமைச்சு அலுவலகத்திற்கு 1-1-71 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

புளியங்குளப் பகுதியில் கடந்த நாலு வருடகாலமாக அரசாங்க குத்தகைக் காணி கண்காணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. எல். சிவகுரு 1-1-71 முதல் குமுளமுனைப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

நெடுங்கேணிப் பகுதியில் கடந்த ஐந்து வருடகாலமாக விவசாய போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. ரி. ஏ. தம்பியப்பா மாஹறாயிலுப்பள்ளம விவசாயப் பயிற்சி நிலையத்திற்குப் போதனாசிரியராக 1-1-71 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

உடுப்பிட்டி, ஞாயிறு

கல்முனை சுகாதார அலுவலகத்தில் சுகாதார அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். சண்முகம்பிள்ளை அடுத்தமாதம் முதல் கிளிநொச்சிப் பகுதிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

——

### 13 பேர் தெரிவு

கொடிகாமம், ஞாயிறு

சமீபத்தில் வெளியிடப்பட்டிருந்த கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தரக் கலைப்பிரிவுப் பரீட்சைப் பெறுபேற்றின்படி சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு 13 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டுப் பணத்தை மிச்சப்படுத்த

### ஆசிய மாநாட்டில் கமிட்டி நியமனம்

காபுல், டிச. 20

உள்நாட்டு பணத்தை மிச்சப்படுத்தும் திட்டமொன்றை ஆராய்வதற்காக காபுலில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

வெளிநாட்டு செலாவணியை சம்பாதிக்கும் அதேசமயம் உள்நாட்டு பணத்தையும் மிச்சம்பிடித்து நாடுகள்தம் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்வதுபற்றி இந்தக்கமிட்டி ஆராயும்.

மகாநாட்டில் இந்தப் பிரச்னை பெரிதும் வாதப் பிரதிவாதங்களுக்குள்ளாகியது. பல நாடுகள் கடும் எதிர்ப்பையும் தெரிவித்தன.

ஆசிய றிசர்வ் வங்கியொன்றை அமைப்பது பற்றி ஆலோசிக்கும்படி அங்கத்துவநாடுகளை மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது, ஆசிய நாடுகளுக்கிடையில் போக்குவரத்துகளை விஸ்தரித்துக் கொள்வதற்கான திட்டம் ஒன்றினைப் பற்றி ஆராயவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது

வடபகுதி

### எம். பி.க்களின் வீடுகளில் வாலிபர் குவிகிறார்களாம்

நல்லூர் ஞாயிறு

தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தில் எம. பி.க்களின் ஆலோசனையின் பிரகாரம் தொகுதி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக தாங்கள் தெரிவித்திருப்பதை பத்திரிகைகளில கவனித்தேன். ஆனால் நீங்கள் எம்மிடம் எவ்வித ஆலோசனையும் கேட்கவில்லை நமும் தரவில்லை. தங்களின் இவ்வித அறிவித்தலினால் எங்கள் வீடுகளில் தினமும் குவியும் வாலிபர் கூட்டத்திற்கு நாம சமாதானம் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விஷயத்தில் உண்மைநிலை என்ன என்பதனை பரிசீலனைசெய்து எமக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன் என்று கோப்பாய் எம், பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் முகமதிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

——

### இயற்கை வளங்கள் மூலம் குடிசைக் கைத்தொழில்

மாத்தளை, ஞாயிறு

"நாட்டிலுள்ள இயற்கை வளங்களைக்கொண்டு பெருந்தொகையான குடிசைக்கைத்தொழில்களை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ரத்தோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். பி. யாலெகம, உல்பொத்தபிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர் விளையாட்டுப்போட்டியில் தலைமை வகித்துப் பேசுகையில் இத்தகவலைவெளியிட்டார் அவர் மேலும் கூறியதாவது.

குடிசைக் கைத்தொழில் மூலம் நாட்டிலுள்ள வேலையில்லாத்திண்டாட்டம் ஒழிவதுடன் நாடும் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஜி, சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர்களை மனேஜர்களாக அமர்த்தித் தொடங்கப்படவிருக்கும் இப்புதிய திட்டம் நிச்சயம் வெற்றி அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

காணியில்லாதவர்களுக்கு குடியேற்றத்திட்ட அடிப்படையில் தாம் 680 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திடமிருந்துபெற வழிவகை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### சீர்திருத்த நடவடிக்கை

கிளிநொச்சி, ஞாயிறு

பெருமழை காரணமாக இப்பகுதியில் சீர்கெட்டுள்ள வீதிகளைத் திருத்திச் செப்பனிடப் பட்டினசபைத் தலைவர் முயற்சி எடுத்துவருவதாகத் தெரியவருகிறது பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட சகல வீதிகளிலும் சேதமடைந்த பகுதிகளைப் பட்டினசபைத் தலைவர் திரு. ச. சு. முருகேசு தற்போது பார்வையிட்டு வருகிறார்.

போலந்தில்

## முக்கிய தொழிற்சாலைகள் தேசியமயம்

வார்ஸோ, டிச. 20

போலந்தில் கடந்தநான்கு நாட்களாக இடம்பெற்ற வன்முறைக் குழப்பங்களின் பின்னர் நேற்று அமைதி நிலவியதாக செய்திகள் கூறின.

என்றாலும் பதற்றநிலைமை இன்னும் மாறவில்லை துறைமுக வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது. முந்திய நகர்களில் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கின்றது.

நாட்டிலுள்ள முக்கிய தொழில் நிறுவனங்களையெல்லாம் அரசாங்கம் கைப்பற்றிவருவதாக அங்கிருந்து வெளியேறிவந்துள்ள வெளிநாட்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

உணவுப் பொருட்களின்

### உள்ளூராட்சிமன்ற ஓவசியர் சங்கம்

மாவிட்டபுரம், ஞாயிறு

உள்ளூராட்சி நிர்வாகத்திலுள்ள ஓவசியர்கள் சங்க நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ் குலசூரியன் (சங்கானை ப. ச.),

உபதலைவர்: ஜே மார்க்

## ரஷ்ய விமானம் இந்தியாவில் விழுந்து நொறுங்கியது

### அதிலிருந்த 17 பேரும் பலி

புதுடில்லி, டிச. 20 யானம் காணப்பட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைக் குழப்பங்களின் பின்னர் நேற்று அமைதி நிலவியதாக செய்திகள் கூறின.

என்ருலும் பதற்றநிலைமை இன்னும் மாறவில்லை துறை முக வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது.

சில இடங்களில் நேற்றும் மோதல்கள் இடம் பற்றன. நாட்டிலுள்ள முக்கிய தொழில் நிறுவனங்களை யெல்லாம் அரசாங்கம் கைப்பற்றிவருவதாக அங்கிருந்து வெளியேறிவந்துள்ள வெளி நாட்டவர்கள் தெரிவிக்கிருர்கள்.

உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து போலந்தில் குழப்பம் வெடித்தது

உள்ளூராட்சி நிர்வாகத்திலுள்ள ஓவசியர்கள் சங்க நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ் குலசூரியன் (சங்காணை ப. ச.), உபதலைவர்: கே மார்க்கண்டு கிளிவெட்டி கி ச), காரியதரிசி: எஸ் இராசகுலசிங்கம் (கிளிநொச்சி ப ச), உபகாரியதரிசி: ஆர் பகதீஸ்வரஐயர் (கொவாஞ்சிக்குடி கி ச.) தனாதிகாரி: எஸ் சுப்பிரமணியம் (சுன்னுகம் ப. ச), உபதனாதிகாரி: வி. மகேஸ்வரன் (குறிஞ்சாக்கேணி கி. ச).

நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் வி உருத்திரா, வி மாணிக்கம், எஸ் சிவானந்தன், எ செல்வசிவம், இ சிவகுரு, ரி இராசநாயகம், வி சின்னத்துரை எஸ் பொன்ராசா, எம் வயிரமுத்து ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

ஒக்கினுவா தீவில்

# ஜப்பானியர் - அமெரிக்கர் மோதல்

டோக்கியோ, டிச 20

பசிபிக்சமுத்திரத்திலுள்ள ஒக்கினுவா தீவில் அமெரிக்க ராணுவ முகாம் ஒன்றுக்கு ஜப்பானியர்கள் நெருப்பு வைத்துக் கொளுத்தினர்கள்.

இத் தீவிலுள்ள ஜப்பானியர் ஒருவர் அமெரிக்க ராணுவ வண்டியொன்றினுல் மோதப்பட்டதைத் தொடர்ந்து அங்கு குழப்பம் ஏற்பட்டது தெருவில் சென்ற சுமார் 100 கார்களுக்கு தீவுவாசிகள் தீயிட்டார்கள்.

இங்கு அமெரிக்கா சேர்த்து வைத்துள்ள விஷவாயுக்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தும்படி ஜப்பானியர் கோரி வருகிருர்கள்.

தீவுவாசிகளுக்கும் அமெரிக்க சிப்பாய்களுக்குமிடையில் படுமோசமாக மோதல் ஏற்பட்டது. கண்ணீர்குண்டுகளையும் அமெரிக்கர் பாவித்தார்கள்.

## வரவுசெலவுத் திட்டம் நிறைவேறியது

மண்டைதிவு, ஞாயிறு

மண்டை தீவு கிராமசபையின் நடப்பு வருடத்தின் வரவுசெலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கி. ச. தலைவர் திரு க. கைலாசபிள்ளை தலைமையில் 7 அங்கத்தவர்கள் உட்பட நடைபெற்ற இக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட வரவுசெலவுத் திட்டம் சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

— —

## நவஜீவனத்தில் நத்தார் விழா

கிளிநொச்சி, ஞாயிறு

பரந்தனில் உள்ள நவஜீவனத்தில் நத்தார் கொண்டாட்டம் ஆரம்பமானது. இளம் மெதடிஸ்த கிறிஸ்தவ சங்க வாலிபர்களால் நடாத்தப்படும் இவ்விழாவை வணக்கத்துக்குரிய ஏ. சி. தம்பிராசா ஆரம்பித்து வைத்தார்.

விழாவில் இசைநிகழ்ச்சிகள், நடனங்கள் கேளிக்கை விளையாட்டுக்கள் ஆகியன இடம்பெற்றன.

## இராணுவ வீரர் தாக்கினராம்

நல்லூர், ஞாயிறு

வீதியில் சென்ற வானை வழிமறித்து சாரதியை ஐந்து ராணுவவீரர்கள் தாக்கியதாக காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் பலாலியில் இருந்து வளலாய்க்கு சென்றுகொண்டிருந்த வானை வழிமறித்து ஜீப்வண்டியில் வந்த இராணுவ வீரர்கள் சோதனையிடப் போவதாகக் கூறி சாரதியை தாக்கினுர்களாம். சாரதியான எஸ் தம்பிராசா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யச் சென்றபோது மயிலிட்டிச் சந்திக்கு அண்மையில் ஜீப் வானை மோதியதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்றெழில் அபிவிருத்திக்குழு

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்றெழில் அபிவிருத்திக்குழு ஒன்று இம்மாதம் 28-ம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவிருக்கிறது. மாவட்ட விவசாய இணைப்புக்குழு அமைப்புப்போல இது செயல்படும் என்றும் அரசாங்கசெயலகத்தில் இது அங்குராப்பணம் செய்யப்படுமென்றும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

கடற்றெழிலாளர் பிரச்னைகள் குறித்தும் இத்தொழிலின் அபிவிருத்தி பற்றியும் இக்குழு ஆராய்ந்து அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யும்.

## பிரதமருக்கு பண்டிதர் ஆலோசனை

வேலணை, ஞாயிறு

பட்டதாரி உதவி ஆசிரியர்கள் நியமனத்தின்போது தகுதி உடையவர்களையும் முன்னர் பட்டம்பெற்றவர்களையும் புறக்கணித்தது போல 5000 பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தில் பட்டதாரிகளைத் தெரிவு செய்யும்போது ஊழல்கள் இடம் பெருது இருப்பதற்காக பின்வரும் ஆலோசனைகளை சமர்ப்பிப்பதாக தீவுப்பகுதி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இந்தியப்பட்டதாரிகளையும் அவர்கள் பட்டம்பெற்றகால அளவுப்படி தெரிவு செய்தல் முறையானது. பயிற்சிபெறும் திட்டத்தின் கீழ் 6200 பட்டதாரிகள் விண்ணப்பித்திருப்பதால் 1969 வரை பட்டம் பெற்றவர்கள் எல்லோரையும் தெரிந்தெடுத்தபின்னர் 1969-ல் பட்டம் பெற்ருேரில் வயது கூடியவர்கள் சிலரைத்தெரிந்தெடுக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டாமல் விடப்படுவோர்களின் தொகை 1200க்குக் குறைவாகவே இருக்கும் இவர்களுக்கும் விரைவில் நியமனம் கொடுத்தால் 1970 வரை பட்டம் பெற்றவர்கள் எல்லோருக்கும் நியமனம் கொடுத்துவிடமுடியும்.

# ரஷ்ய விமானம் இந்தியாவில் விழுந்து நொறுங்கியது

## அதிலிருந்த 17 பேரும் பலி

புதுடில்லி, டிச. 20

மேற்கு வங்காளத்தில் விழுந்து நொறுங்கிய சோவியத் விமானத்திலிருந்து 17 பிரயாணிகளும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. இவர்கள் அனைவரும் சோவியத் பிரஜைகள்.

டாக்காவிலிருந்து புதுடில்லிக்கு வந்துகொண்டிருந்தபொழுது எஞ்சின் கோளாறு ஏற்பட்டு விமானம் விபத்துக்குள்ளானது. கிழக்குப் பாகிஸ்தானில் சூருவளிக் கொடுமைக்குள்ளான மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிவிட்டு ரஷ்யா திரும்பும்வழியில் விமானம் புதுடில்லிக்குத் திரும்பிக்கொண்டிருந்ததால் விமானத்தின் எஞ்சின் ஒன்றில் தீப்பற்றியதாகவும் அதனுல் கல்கத்தாவில் கட்டாயமாக தரை இறங்க நேர்ந்ததாம். விமானத்திலிருந்த 17 பேரும் கொல்லப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. 12 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 4 பிணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த விபத்து குறித்து இந்திய ஜனுதிபதி திரு வி. வி. கிரி பெரிதும் கவலை தெரிவித்து செய்தியொன்றை விடுத்திருக்கின்ருர்.

......

## ‘இலிகிதரின் ஓய்வு பேரிழப்பாகும்’

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவுகிராமசபையில் லிகிதராகக்கடமை யாற்றிய திரு அ. ந. தம்பிராசா தமது 27வருட சேவையின் பின்னர் ஓய்வுபெறுவதைப் பாராட்டுமுகமாக கிராம சபை சக ஊழியர்களால் பிரிவுபசாரவிழா ஒன்று நடாத்தப்பட்டது.

கி ச உபதலைவர் திரு. பெ கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற விழாவில் உபதலைவர் ஓய்வுபெறும் திரு. தம்பிராசாவின் சேவையைப் பாராட்டிப் பேசுகையில், கிராமசபை எதுவித ஊழலுமின்றி சிறப்பாக இயங்க திரு. தம்பிராசா அயராது உழைத்தார். அவரது ஓய்வு இக்கிராமத்திற்கும், கிராமசபைக்கும் பேரிழப்பாகும் சமூக சேவையிலும் மிகவும் ஈடுபாடுடைய இவர் ஓய்வுபெற்ற காலத்திலும் தமது சேவையை இந்நாட்டுக்கு அளிப்பாரெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினுர்.

வரி மராமத்து அதிகாரி திரு செ. தி. மகேஸ்வரன். திரு மு. சச்சிதானந்தம் உட்பட பலர் அன்னுர் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

விவசாயப்படை

## வீரர்களின் மிகுதிப் பணம்

உடுப்பிட்டி, ஞாயிறு

விவசாயப்படை வீரர்களின் மாதாந்த ஊதியத்தில் கழிக்கப்பட்டுவந்த பணம் முழுவதையும் மொத்தமாக வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான வவுச்சர்கள் தற்போது கலைக்கப்பட்ட விவசாயப்படை முகாம்களின் சகல விவசாயப்படை வீரர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. அடுத்தவருடம் ஜனவரிமாதம் அனைவருக்கும் பணம் அனுப்பிவைக்கப்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## “உள்ளூராட்சியில் ஓவசியர்களின் பங்கு”

மாவிட்டபுரம், ஞாயிறு

“உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழ்உள்ள ஓவசியர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தில் முக்கியபங்கு வகிக்கிருர்கள். எனவே அவர்கள் அம்மன்றங்களுடன் ஒத்துழைத்து அவற்றை முன்னேற்ற வேண்டும்” என்று.

ஐக்கிய உள்ளூராட்சி சேவை ஓவசியர்கள் சங்கத்தின் 6-வது வருடாந்த மகாநாடு காங்கேசன்துறையில் நடைபெற்றபோது உரையாற்றிய உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு. அ. அ. யோசப் கூறினுர்.

திரு. ஞா. ஜோன்பிள்ளை தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது.


காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் பேசுகையில் உள்ளூராட்சிசேவையில் ஓவசியர்கள் செய்யும் சேவை மிக முக்கியமானது என்றும் சபைகளின் வருவாயைச் சேகரிப்பதும் சபையின் செலவை மட்டுப்படுத்திச் செலவு செய்வதும் ஓவசியர்கள்தான் என்றும் சொன்னுர்.

தராதரப் பத்திர உயர்தரக் கலைப்பிரிவுப் பரீட்சைப் பெறுபேற்றின்படி சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு 13 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட சகல வீதிகளிலும் சேதமடைந்த பகுதிகளைப் பட்டினசபைத் தலைவர் திரு. ச. சு. முருகேசு தற்போது பார்வையிட்டு வருகிருர்.

காணியில்லாதவர்களுக்கு குடியேற்றத்திட்ட அடிப்படையில் தாம் 680 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திடமிருந்துபெற வழிவகை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.


# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிருர்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P.0447


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நீ எதைச் செய்தாலும் சரி, உனக்கும் உலகுக்கும் உண்மையாக நடந்துகொள்வது உன் கடமை.
— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu Monday Jaffna Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 339.

ஈழநாடு ... திங்கட்கிழமை மார்கழி மாதம் 6-ம் திகதி (21-12-70)

## பனம் பொருள் கைத்தொழில்

பனம் பொருள்களில் இருந்து என்னென்ன கைத்தொழில்களை உடனடியாக ஆரம்பிக்கலாமென்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு காரியாதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. எப்போதோ செய்திருக்கவேண்டிய ஒரு நல்ல காரியத்தை காலங்கடந்த பின்னராவது மேற்கொள்ளப்பட்டிருப்பதை பாராட்டி வரவேற்கவேண்டும்.

ரப்பர் தென்னைப் பொருள் ஆராய்ச்சி நிலையங்கள் போன்று வடக்கில் 'பனம் பொருள் ஆராய்ச்சி நிலையமொன்று நிறுவப்பட வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கை முன்னைய தேசிய அரசாங்கத்தின் காலத்தில் ஆட்சி மன்றத்தில் ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதுடன் நின்றுவிட்டது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் பனம்பொருள் ஆராய்ச்சியில் அக்கறை செலுத்தத் தொடங்கியது. பேராசிரியர் குலரத்தினம் உட்பட சிலரைக்கொண்ட ஒரு குழுவும் இதுசம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டது இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்து, பனம் பொருள் ஆராய்ச்சி பற்றி மேற்கொண்டும் ஆராய்ந்து, அதற்கென ஒரு நிலையம் அமைத்து பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுவதென்பது "வடலி வளர்த்து..." ஏதோ செய்வதென்று வடக்கில் வழங்கும் பழமொழிக் கதையாகவே முடியும்.

உதவிக் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், காரியாதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் பனையிலிருந்து பெறப்படும் மூலப்பொருள்களிலிருந்து என்னென்ன கைத்தொழில்

பனையை நூதனசாலையில் தான் பார்க்கவேண்டிய நிலை ஏற்படலாம். கற்பகதரு என்ற பெயர் பெற்றுள்ள போதும் பனையைச் சரிவர இன்னும் இலங்கை மக்கள் குறிப்பாக வடபகுதி மக்கள் பயன்படுத்தத் தொடங்கவில்லை. நல்ல வைரம் பாய்ந்த பனைகளைத் திரளதிகளாகப் பாவிப்பதைக்கூட விடுத்து பெருந்தொகைப் பணம் செலவுசெய்து காட்டு மரங்களை இங்கு கொண்டு வருவதில் கூட இன்றுள்ளவர்கள் ஈடுபடுகின்றனர். இன்னும் கிராமப் பகுதிகளிலுள்ள சிலரது முயற்சியால் தான், பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், பனங்கட்டி போன்ற சில உணவுப் பொருள்களாவது கிடைக்கக் கூடியதாகவிருக்கிறது.

தமிழ்நாட்டில் பனம் பொருள்களிலிருந்து பல விதமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 'பனைச் செல்வம்' என்ற சஞ்சிகை கூட அங்கு வெளி வருகிறது. பனையிலிருந்து என்னென்ன பொருள்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன; என்னென்ன பொருள்களை உற்பத்திசெய்ய முடியுமென்பது பற்றி இந்த சஞ்சிகையில் வெளியிடப்படுகிறது.

இங்கும் பனங்கள்ளில் இருந்து சீனி தயாரிப்பதில் சிலர் ஈடுபட்டனர். போதிய ஆதரவும் ஊக்கமும் உதவியும் இல்லாததால் அது வெற்றிபெறமுடியாது போய் விட்டது.

இங்கு பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுக் கைவிட்டவர்களிடமும், ஈடுபட்டுள்ளவர்களிடமும் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடை பெற்றுவரும் பனம்பொருள் உற்பத்திக் கைத்தொழிலாளர்களிடமும் ஆலோசனைகளும் தொழில்நுட்ப உதவிகளும் பெற முன்வருவது விரும்பத்தக்கது.

இ போதுள்ள பனைகளில் இருந்தே கைத்தொழில்கள் பலவற்றையும் துணிந்து

# 'விஞ்ஞானத்தால் இயற்கையை வெல்ல முடியாது'

விஞ்ஞானம்துரிதமாகமுன்னேறிக் கொண்டுவரும் இந்நாளிலே பெரும்பாலான எமது மாணவர்களிடம் விஞ்ஞானத்தினால் எதையும் சாதிக்க முடியும், கடவுள் சமயம் என்பதெல்லாம் வெறும் கதை என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலையிலே நாம் மாணவ உலகிற்கு ஒரு சில வற்றை எடுத்துக்கூறவிரும்புகின்றோம்.

மனிதன் இயற்கையின் ஆக்கம் இதேமனிதன் தனது பகுத்தறிவினால் விஞ்ஞானம் என்னும் கருவிகொண்டு இயற்கையை தனது வயதிக்கேற்ப ஓரளவு மாற்றி அமைக்கின்றான். ஆனால் அவனால் இயற்கையை முற்றாக மாற்றியமைக்கவோ வெல்லவோ முடியாது. உதாரணமாக நிலத்திலே இரும்புஇருக்கின்றது. பெட்ரோலியம் இருக்கின்றது இவை இரண்டும் இயற்கையின் ஓர்பகுதி இதை விஞ்ஞானத்தினால்மாற்றி அமைக்கும் பொழுது இரும்பு நாம் சுலபமாக நடமாடமுடியும் வாகனமாகவும், பெற்றோலியம்வாகனத்திற்குவேண்டிய சக்தியாகவும் மாறுகின்றது இதைக்கொண்டு நாம்இயற்கையை வென்றுவிட்டோம் என்று கூறிவிட முடியாது ஏனெனில் வாகனம் பழுதடைந்து கைவிடப்பட்டதும் அது இரும்பாகவும் சூரியனின் சக்தியில் இருந்து உருவாகிய பெற்றோலியம் திரும்பவும் சக்தியாகவும் மாறி இயற்கையில் ஆரம்பத்தில் அவைகள் இருந்த நிலையை அடைகின்றன, இப்பொழுது சொல்லுங்கள் இயற்கையை நாம் வென்று விட்டோமா? இல்லை.

இயற்கையிலே உள்ள பொருட்கள் அனைத்தையும் நாம் சக்திமயமாக மாற்றலாம் உதாரணமாக அணுக்குண்டிலே பெறப்படும்சக்தி உலோக அணுக்களில் இருந்து பெறப்படுகின்றது. மின்சாரம் இயற்கையிலே உள்ள இலத்திரன் (ELECTRON) அசைவினால் பெறப்படுகின்றது. எனவே இயற்கை 'சக்தி' மயமானதே.

இந்த 'சக்தி'யைத்தான் விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள் "சக்தியை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது' என்று, (LAW OF CONSERVATION OF ENERGY) அதாவது 'சக்தி' நம்மையும் நமது ஆற்றலையும் கடந்தது என்பதே இப்படி நம்மையும் நமது ஆற்றலையும் கடந்த சக்தியைத் தான் நாம் 'கடவுள்' என்று கூறுகின்றோம், எனவே விஞ்ஞானிகளே 'கடவுள்' என்பதற்குவரைவிலக்கணம் கூறிவிட்டார்கள்,

இந்தச்சக்தி எங்கும் நிறைந்தது எல்லாம் வல்லது என்பது விஞ்ஞானிகளின்கூற்று. இதைத்தான் நமது சமயங்கள் 'கடவுள் எங்கும் நிறைந்தவர் எல்லாம்வல்லவர் என்று கூறுகின்றன.

நமக்கு அப்பாற்பட்டது சக்தி இந்த சக்திக்கு நாம் பணியவேண்டும் என்று எப்பொழுது ஒருவனுக்குத் தோன்றுகின்றதோ அன்று தான் கடவுள் பக்தி ஆரம்பமாகின்றது என்று கூறலாம்

'சக்தி ஒரு உண்மையான பொருள்' எனவே மனிதன் உண்மைக்குப் பணிகின்றான். மனிதன் உண்மைக்குப்பணியும் பொழுதுதான் மனிதன் மனிதனாக வாழுகின்றான். அவன் மனதிலேதான் நேர்மை, விசுவாசம், நம்பிக்கை, அன்பு, இரக்கம் போன்ற அத்தியாவசிய மானவை குடிகொள்கின்றன. இந்நிலை ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுமாயின் சகமனிதனை சகோதரனாக மதிக்கும் தன்மை ஓங்கும் இது சமுதாய ஒற்றுமையை வளர்க்கும், சமுதாய ஒற்றுமை நாட்டு ஒற்றுமையை வளர்க்கும் நாடுகளின் ஒற்றுமை உலக ஒற்றுமையை வளர்க்கும் எனவே "உலகசமாதானம்' கடவுள் நம்பிக்கையின் அடிப்படையிலேதான் தோன்றும்விஞ்ஞானத்தினால் உலக சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

இன்று உலகத்திலே பல விதமான மதங்கள் இருக்கலாம் ஆனால் அவைபோதிக்கும் உண்மை 'கடவுள் ஒருவன் இருக்கின்றான் அவனை நாம் தொழவேண்டும் என்பதே' இந்த அடிப்படையில் எல்லா மதங்களும் ஒன்றே.

இன்றைய சமுதாயம் மொழி, மதம், சாதி, தேசம் போன்ற அடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன வேறுபாடுகள் கடவுள் வணக்கம்' என்ற அடிப்படையில் மறைந்து விடுகின்றன எனவே சமுதாய ஒருமைப்பாட்டிற்கு உலக சமாதானத்திற்கு இறைவணக்கம் மிகவும் முக்கியமானது "இறைநெறி"யின் கீழ் நாம் அனைவரும் மனிதகுலம்" என்ற ஒற்றுமைப்பாட்டுடன் வழவேண்டும் இதை இன்றைய சமூகத்தினர் முக்கியமாக மாணவர்கள் கடைப்பிடித்தால் ஒவ்வொருவரும் உலக சமாதானத்திற்கு உதவுகின்றீர்களென நீங்களே பெருமை கொள்ளலாம்.

எஸ். என். கதிர்காமநாதன்
(தலைவர் அகில இலங்கை கல்விக்கழகம். தலைவர் 'கதிர்க்கூட்டு' சமாதான இயக்கம் இலங்கைப் பல்கலைக்கழகமாணவர், கொழும்பு.)

## ஐயாறன் எழுதுவது...

மூந்திய தேசிய அரசாங்கத்தை "வனசர ஆண்டுவ'. (காட்டுமிராண்டி ஆட்சி) என்று காலிப்பிரதிநிதி டாக்டர் டபிள்யு தகநாயக பார்லிமெண்ட் சபையில் அழகாக வர்ணித்தார்.

காரணம், வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தாத விவசாயிகளுக்கு அரிசிக்கூப்பன் புத்தகத்தை அந்த அரசாங்கம் மறுத்ததானும். கொடுத்தகடனைத் திருப்பிக் கேட்பதே மனிதப் பண்பற்ற காட்டுமிராண்டித் தனம்தான். இருந்தால் அவர்கள் தாங்களாகத் திருப்பிக் கொடுத்திருக்க மாட்டார்களா? கடன் கொடுக்கவேண்டியதே அரசாங்கத்தின் கடன். அதை ஏன் திருப்பிக்கொடுக்க வேண்டும்? கடனைத் திருப்பிச் செலுத்தாதவருக்கு அரிசிக் கூப்பனும் மறுத்து. அவர்களை உணவின்றி பரிதவிக்கவிட்டது டபின் காட்டுமிராண்டித் தனமான வேலையல்லவா?

டாக்டர் தகநாயகா பார்லிமெண்டில் இதைக் குத்திக்காட்டியது இந்த அரசாங்கத்துக்கும் ஓர் எச்சரிக்கையாகும். வீடு கட்டவோ அல்லது வேறு எக்காரணத்துக்கோ அரசாங்கம் கொடுத்தகடனை திருப்பிக்கேட்டு, தங்களையும் "வனசர ஆண்டுவ" வாகச்செய்துகொண்டுவிடக் கூடாது.

விவசாயிகளிடம் சாகுபடி செய்த அரிசி இருக்குமென்றும், அவர்கள் கூப்பனில்லாவிட்டாலும் பட்டினி கிடக்கமாட்டார்களென்றும் கேட்கிறீர்களா? நமது விவசாயிகள் எல்லாருக்கும் சீனம் அனுப்பும் வெள்ளை அரிசிதான் பிடிக்கும். தாங்கள் விளைவித்த அரிசியை அவர்கள் சாப்பிடமாட்டார்களென்ற ரகசியம் உங்களுக்குத் தெரியாதா? மேலும் நாட்டில் எல்லோருக்கும் அரிசியை இலவசமாகக்கொடுத்தபோது, விவசாயிகளுக்கு மட்டும் எக்காரணம் பற்றியும் அதை மறுப்பது நீதியா, நியாயமா? தருமந்தானா? அப்படி மறுப்பது காட்டுமிராண்டித்தனமென்று தகா அவர்கள் கூறுவதில் என்ன தவறு?

ஆனால் டாக்டர் அவர்களே அந்த ஆட்சியில் அமைச்சராகச் சேர்ந்திருந்தாரே, அச்சமயம் அவர் ஏன் இதைப்பகிரங்கமாகக் கண்டித்து அந்த ஆட்சியிலிருந்து வெளியேறி இருக்கப்படாது? நட்டாற்றில் அந்த ஆட்சியை விட்டு விட்டு வந்தால் அது நாகரீகப்பண்பாகாதென்றும், அது காட்டுமிராண்டித்தனமாகுமென்றே கடைசிவரை பொறுமையாக வாய்திறக்காமல் இருந்து அந்த ஆட்சியைக் காப்பாற்றி வந்தார். இடையில் அவர் அந்த ஆட்சியை விட்டிருந்தால் அதுநன்றிகெட்டதாவதுடன் அந்தஆட்சியும் மேலே எப்படி நடந்திருக்க முடியும்?

அதுசரி, அப்பேர்ப்பட்ட காட்டுமிராண்டி ஆட்சி என்று தெரிந்தும் மீண்டும் பொதுத்தேர்தலில் ஏன் அவர் அக் கட்சியின் பெயரால் போட்டியிட்டார் என்று கேட்கிறீர்களா? காலித் தொகுதியில் அவர் முன்வந்திராவிடில் அக் கட்சிக்கு அங்கு வேறு யாரும் கிடைத்திருப்பார்களா? கிடைத்தாலும் அவர்கள் வெற்றிபெறுவரா? அக்கட்சியின் பெயரால் போட்டியிட்டதால்தான் அவருக்கு வாக்குகளும் குறைந்து விட்டனவாம். ஐந்து வருடகாலம் அமைச்சர் பதவியில் இருந்துவிட்டு பின்னர் அக் கட்சியின் பெயராலேயே தேர்தலில் நின்று வெற்றி பெற்றபின் அக் கட்சியிலிருந்தும் விலகி தானும் நடத்திய பழைய ஆட்சியையே காட்டுமிராண்டி ஆட்சி என்று தாக்குவது தான் மேலான அரசியல் பண்பாகும் ஒருவேளை அக் கட்சியே ஆட்சிக்கு வந்திருந்தால் டாக்டர் அவர்கள் அதிலிருந்து விலகி இப்படி எல்லாம் கூறுவாரா என்று கேட்காதீர்கள் அவர் தொடர்ந்து அமைச்சராக இருந்திருப்பார்தான். அதில் என்ன தவறு?

0 0 0

இச்சமயத்தில் அவர் ஏன் இவ்விதம் கூறவேண்டும். இதில் அரசியல் நோக்கம் ஏதும் உண்டா? இப்போது மந்திரிப்பதவி ஏதும் அவருக்கு காத்திருக்கிறதா என்று சந்தேகப்படுகிறீர்களா? சோழியன் குடுமி சும்மா ஆடாதென்று கூறுவார்கள். அரசியலில் என்ன தான் நடவாது? பிரதமராகவும் அமைச்சராகவும் பல்லாண்டுகள் இருந்து அனுபவம் பெற்ற டாக்டரைப் போன்ற ஒருவர் வெறும் எம். பி. யாகஇருப்பின் அது நாட்டுக்குப் பெருநஷ்டம் தானே. எல்லாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

0 0 0

மாதம்ரூபாய் 1500 சம்பளமும் ரூபா 500 படிச் செலவும் பெறும் அமைச்சர்கள் வாழ்க்கையை சமாளிக்கையில் மாதம் ரூபா 3500 பெறுபவர் ஏன் சமாளித்து மிச்சப்படுத்த முடியாது என்று கேட்கிறார் நிதிஅமைச்சர் என். எம். உண்மைதான். ஆனால் மக்களில் எவ்வளவு பேருக்கு அவ்வளவு சம்பளம்? வாழ்க்கைச்செலவுகள் உயர்ந்து கொண்டு போகையில்வேலையின்றித் தவிப்பவர்களுக்கு அவர் ஏதும் அலவன்ஸ் அளித்து உதவி செய்வாரா?

"அரசாங்கம் இனப்பாகுபாடு காட்டவில்லை

# பொய்ப்பிரசாரத்துக்கு செவி சாய்க்காதீர்"

### உடுப்பிட்டியில் தோட்டத்தொழில் உதவி அமைச்சர்

உடுப்பிட்டி. ஞாயிறு ப[illegible] படைத்தவர்களால்

# 'தட்டிக் கேட்க முன்வரவேண்டும்'

மட்டுவி[illegible]னி

'தியாகத்தின் அடிப்படையிலேதான் இன்றைய சந்ததியினர் எதிர்கால சந்ததியினரைச் சூழ்ந்துள்ள இடுக்கண் அகற்றவும் அவர்களின் வாழ்க்கை [illegible]

வது!

இன்று பல்கலைக் கழகங்களிலே தமிழ் மாணவர்கள் தான் எத் துறையிலும், பொறியியலிலும் சரி வேறெந்தத் துறையிலும் சரி அதிகம் புள்ளிகளைப் பெற்று திறமையான

# எம். பி.க்களுக்கு பென்ஷன் இப்போதைக்கு இல்லை

கொழும்பு, ஞாயிறு

ஆட்சிமன்ற உறுப்பினருக்கு பென்ஷன் வழங்கும் திட்டத்தை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் இத்திட்டம் இப்போதைக்கு அமுலுக்கு வரும் என்று தெரியவில்லை. நாட்டின் தற்போதைய நிதிநிலைமையே இதற்குக் காரணம்.

இதே சமயம் பத்து

அறியப்படுகின்றது.

ஆட்சி மன்றஉறுப்பினர்களுக்கு பென்ஷன் வழங்குவது சம்பந்தமாக ஆராய்ந்த பிரதிநிதிகள் சபை கமிட்டி 7 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஆட்சிமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ள அனைவருக்கும் பென்ஷன் வழங்கவேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது. ஆனால் பத்து ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான அமைச்சர் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், காரியாதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் பனையிலிருந்து பெறப்படும் மூலப்பொருள்களிலிருந்து என்னென்ன கைத்தொழில்களை ஆரம்பிக்கலாமென்பது பற்றி ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நான்கு காரியாதிகாரிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. பனை வளர்ப்பில் அதிக அக்கறை செலுத்தாவிட்டால் இன்னும் சில வருடங்களில்

பெற்றுவரும் பனம்பொருள் உற்பத்திக் கைத்தொழிலாளர்களிடமும் ஆலோசனைகளும் தொழில்நுட்ப உதவிகளும் பெற முன்வருவது விரும்பத்தக்கது.

இ போதுள்ள பனைகளில் இருந்தே கைத்தொழில்கள் பலவற்றையும் துணிந்து ஆரம்பிக்கமுடியும். இதன் மூலம் நமது தேவையைப் பூர்த்திசெய்துகொள்வதுடன் வெளிநாடுகளுக்கு பண்டமாற்றுமுறையில் ஏற்றுமதி செய்து நமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யவும் வழிபிறக்கும்.

# மொழிகாரணமாக விலகிய

## ஊழியருக்கு நட்டஈடு வேண்டும்

### சுதந்திரக்கட்சி மத்திய கமிட்டியில் துரைராசா வற்புறுத்துவார்

கொழும்பு, ஞாயிறு

மொழிகாரணமாக அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகியவர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் நட்டஈடு போன்று கொடுக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமான பிரேரணை ஒன்றை சுதந்திரக் கட்சி பிரமுகர் திரு. துரைராசா சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டிக்கு சமர்ப்பிக்கவிருப்பதாக அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் தனியார் துறைகளைப் பெருமளவு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதினால் மொழிகாரணமாக அரசாங்க உத்தியோகத்திருந்து விலகியவர்கள் மேலும கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. மொழிப் பிரச்னை காரணமாக ஒய்வுபெறும் வயதிற்கு முன்னர் ஒய்வு பெற்று தனியார் துறையில ஈடுபட்டு உழைத்துவரும் பலரின் எதிர்காலம்பற்றி அரசாங்கம் சந்திக்கவேண்டும். மொழி காரணமாக விலகியவர்களைக் கார்ப்பிரேஷனில் சேர்த்துக்கொள்வதில்லை என்ற திட்டம்பற்றியும் ஆராயப்படவேண்டும்.

நிர்ந்தரக் காரியதரிசிகளை ஓய்வு பெறச்செய்யும்போது சாதாரணமாக கொடுக்கப்பட்டுவந்த 5 வருட கால நட்ட ஈட்டுடன், தற்போது 55 வயதுடன் ஓய்வுபெறவிருக்கும் நிரந்தரக்காரியதரிசிகளுக்கு மேலும் 5 வருட கால நட்டஈடு சேர்த்துக் கொடுக்கப்படுகின்றது. அதுபோல மொழி காரணமாக விலகியவர்களுக்கும் குறித்த ஒய்வுபெறும் வருடம் எத்தனையோ அத்தனை வருட நட்டஈடு கொடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தவிருக்கிறார்.

## நாடகம் தமிழ்கலைகளை வளர்க்கும்

நெடுங்கேணி, ஞாயிறு

''நாடக மன்றங்களின் மூலம் நாட்டிலே தமிழ் கலைகளைத் தட்டி எழுப்பலாம் தமிழ் நாடகங்களை நாடெங்கும் நடாத்த இதுபோன்ற மன்றங்கள் முன்வரவேண்டும்.''

சமீபத்தில் நடைபெற்ற நெடுங்கேணி நாடக மன்றத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வே. மாரிமுத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி மன்ற செயலாளர் திரு. டி. பி. பொன்கலன், காரியாதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த திரு. இ. கனகலிங்கம், கமால் சேவை இலாகாவைச் சேர்ந்த திரு. சின்னமணி, கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த திரு பரமநாயகம் உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.


## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


# "செவி சாய்க்காதீர்"

## உடுப்பிட்டியில் தோட்டத்தொழில் உதவி அமைச்சர்

உடுப்பிட்டி, ஞாயிறு

''ஸ்ரீமாவோ அரசாங்கம் ஒரு பகுதி மக்களை அடக்கி ஒடுக்கி இன்னொரு சாதியினருக்குப் பந்தம் பிடிக்கும் அரசாங்கம் அல்ல. சகல இனத்தவரையும்சமமாகவே எமது அரசாங்கம் நடாத்துகிறது. நாம் கஷ்டப்பட்டு வாழ்கின்றோம், பிறரால் அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்கின்றோம் இந்நிலைமாறப் போராட்டம் ஒன்றை நடத்தவேண்டும்''

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயம் செய்த தோட்டத் தொழில் உதவி அமைச்சர் திரு. அல்பேர்ட் காரியவாசம் கரணவாய் தெற்கு வள்ளுவர்சனசமூக நிலையத்தினரால் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினார்.

கரணவாய்ப் பகுதி மக்களின் கைவண்ணத்தில் உருவான பன்ன வேலைகள், பெட்டிகள், பாய்கள் போன்ற சிறு கைத்தொழிற் பொருட்களைப் பார்வையிட்ட உதவி அமைச்சர் இப்பகுதி மக்களின் ஊக்கத்திற்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

பனைமரத்திலான கைத்தடியொன்றும் அமைச்சருக்கு அன்பளிக்கப்பட்டது கள்ளு வரிச் சட்டத்தை விலக்கிச் சீவல் தொழிலாளருக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும், பனம்பொருள் ஆராய்ச்சிநிலையம் நிறுவித்தர வேண்டுமென்றும் இப் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் பயிற்சி நிலையமும், கொள்வனவு நிலையமும் இக்கிராமத்தில் நிறுவித்தர வேண்டுமென்றும் கோரும் மகஜரொன்றும் தென்கருணை வள்ளுவர் சன சமூக நிலயத்தினரால் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இக் கோரிக்கைகளைப் பரிசீலனைசெய்து ஆவன செய்வதாக உதவியமைச்சர் உறுதியளித்தார். பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும்பொழுது பல இளம் வாலிபர்களுக்கு வேலைவசதி பெறக்கூடிய வாய்ப்புக்கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. காரியவாசம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஒடுக்கப்பட்டமக்கள்கைத்தொழிலில் முன்னேறி மனிதன் மனிதனுக வாழவேண்டுமென்ற எண்ணமுடையது மக்கள் அரசாங்கம். வெள்ளைக் காரனுல் முன்பு அடக்கி ஆளப்பட்டோம், பின்பு பணம் படைத்தவர்களால் நசுக்கப்பட்டோம். குல அடிப்படையில் தாழ்த்தப்பட்டோம் இவற்றையெல்லாம் நீக்க நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்து போராட்டத்தை நடாத்தவேண்டும்,

வடக்குத் தெற்கு என்றும் சிங்களவர் தமிழர் என்றும் பாகுபாடுகள் பேசிவருகின்றனர் ஒருசாரார். ஏகாதிபத்தியக் கும்பல்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்க வேண்டும். சாதிகளை அகற்றி எல்லோரும் ஒருமித்து ஒரே சமுதாயமாக வாழவேண்டும்.

தென்னிலங்கை மக்களுக்கும், வடபகுதி மக்களுக்கும் நிறத்திலோ உருவத்திலோ வேறுபாடு காணப்படவில்லை. பொய்ப் பிரசாரங்களுக்குச் செவிசாய்க்காமல் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்திற்கு எம்மால் உதவ முடியும்.

மட்டுவில் [illegible]னி

'தியாகத்தின் அடிப்படையிலேதான் இன்றைய சந்ததியினர் எதிர்கால சந்ததியினரைச் சூழ்ந்துள்ள இருளை அகற்றவும் அவர்களின் வாழ்க்கை [illegible]றுவதற்கான ஒரு புதிய [illegible]ப்தத்தை உருவாக்கவும் முடியும் இன்று பல்கலைக் கழகங்ளில் தமிழ் மாணவர் எவ்வளவுதான் திறமையிருந்தும் அவர்களுக்கு இடமில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தட்டிக் கேட்பதற்கு பெற்றோரும் சகோதர சகோதரிகளும் துணிந்து முன் வந்தால் அவர்களுக்காக ஒருபுதிய யுகத்தை உருவாக்க முடியும்.

இவ்வாறு, மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் கனிட்ட வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் எம் பி கூறினார். மேற்படி வித்தியாசாலை அதிபர் திரு எஸ். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு நவரத்தினம் எம். பி தொடர்ந்து கூறியதாவது:

இன்று பல்கலைக் கழகங்களிலே தமிழ் மாணவர்கள் தான் எத் துறையிலும், பொறியியலிலும் சரி வேறெந்தத் துறையிலும் சரி அதிகம் புள்ளிகளைப் பெற்று திறமையான சித்தியடைகிறார்கள் இருந்தும் அவர்களின் தலைவிதியோ அல்லது தமிழனென்ற காரணத்தாலோ அவர்களுக்கு இடமில்லை இது ஏன்? எதற்காக, இந்தநிலை என்று தட்டிக்கேட்பார் யார்? இதை ஆராய்வதின் மூலமே எமது இன்றையபெற்றோரும், இளம் சகோதர சகோதரிகளும், தமது எதிர்கால சமுதாயத்திற்காக ஒருபுதிய சகாப்தத்தை உருவாக்கமுடியும்.

அரசியல் தலைவர்கள் தம் கடமைகளை சரிவரச் செய்த போதிலும் இன்றைய இளம் பெற்றோர், இளம் சகோதர சகோதரிகள் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று இப்படியான அநீதிகள் எமது எதிர்கால சந்ததியினரை நோக்கி தலைதூக்கும்போது, அதை அழித்து நல்ல ஒரு எதிர்காலத்தை அவர்களுக்கு உருவாக்குவதற்கு நாமும் தியாகம் செய்யமுன்வரவேண்டும்.

வட்டார வித்தியாதிகாரி திரு. வி. கந்தசாமி வடமாநில கல்வி பிரதம அதிகாரி திரு. ஆர். சந்திரசேகரம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

திருமதி கந்தசாமி மாணவ மாணவியர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். பாடசாலை அதிபர் நன்றியுரை வழங்கினர். மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சினிமா விமர்சனம்

## பாப்பரசரை தரிசிக்காதவர்கள் - ஏன்?

அண்மையில் இலங்கைக்கு விஜயஞ்செய்த புனித பாப்பரசர் ஆறுவது சின்னப்பரை நேரில் தரிசிக்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நேரில் தரிசிக்கச் சென்றவர்கள்கூடத் தெளிவாகப் பாப்பாண்டவரைக் பாத்திருக்க முடியுமோ என்ற சந்தேகம் யாழ். வின்ஸர் தியேட்டரில் தற்போது காண்பிக்கப்படும் 'பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்தைப் பார்ப்போருக்கு ஏற்படச்செய்யும்.

பல லட்சம் மக்கள் குழுமியிருந்து பாப்பாண்டவரைத் தரிசிக்கக் காத்திருந்த காட்சியைச் சுமார் அரை மணி நேரம் வரை வின்ஸர் தியேட்டரில் படமாகக் காட்டுகிறார்கள் நேரில் சென்றவர்கள்கூட இப்படத்தைப் பார்க்கவேண்டும் என்றே சொல்லலாம், ஏன்? இவ்வளவு தெளிவாக ஆறுதலாகப் புனித பாப்பரசரைத் தரிசிக்கும் பாக்கியத்தை இச்சந்தர்ப்பத்தில் தவறவிடுவோர் நிச்சயம் கவலை அடையத்தான் செய்வார்கள். எதுவித ஆயுதங்களையும் கையில் வைத்திராமல் ஜனவெள்ளத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்த இலங்கை இராணுவ பொலிஸ் கடற்படை வீரர்களையும் நாம் இங்கு காணலாம். அரசாங்க தகவற் பகுதியினர் இதை வெளியிட்டுள்ளனர். பாராட்டுக்குரியவர்கள் தான்,

வின்ஸரில் 'ஏன்?' படத்தின் இடைவேளையின்போது பாப்பரசர் நீண்ட நேரம் காட்சி தருவதால் நடந்து முடிந்த படக்காட்சிகூட நினைவின்றிப் போய்விடுகின்றது. ஏன்? படத்தில் செல்வந்தர் ஒருவரின் மகன் ராமுவாக வரும் ராஜனும் சகோதரியாக வரும் லட்சுமியும் சோகம் ததும்ப நடித்துள்ளார்கள். இவர்களின் அத்தை மகன் ரவிச்சந்திரன் ராமுவின் சகோதரியைத் திருமணம் செய்வதில் ஏற்படும் தாமதத்தினுல் பல இன்னல்களை ஏற்படச் செய்கின்றன? ஏன்? திருமணம் செய்யவில்லை என்று கேட்கிறீர்களா? இதற்கான காரணத்தை அறிய நீங்கள் குடும்பத்துடன் சென்று பார்த்தால் 'ஏன்' என்று விளங்கும்.

— காசி.

[illegible]

யளவில் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் இத்திட்டம் இப்போதைக்கு அமுலுக்கு வரும் என்று தெரியவில்லை. நாட்டின் தற்போதைய நிதிநிலைமையே இதற்குக் காரணம்.

இதே சமயம் பத்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஆட்சிமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளவர்களுக்கு மாத்திரமே பென்ஷன்வழங்குவதுஎன்றுமுடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் [illegible]ந்த பிரதிநிதிகள் சபை கமிட்டி 7 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஆட்சிமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ள அனைவருக்கும் பென்ஷன் வழங்கவேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது. ஆனல் பத்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அங்கம் வகித்தவர்களுக்கு மாத்திரமே பென்ஷன் வழங்குவதென்று [illegible] அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது (சி பி ஏ)

# தனியார் உற்பத்தியிலும் அரசாங்க உற்பத்தி குறைவு

கோட்டை, திங்கள்

அரசாங்கத்தின் கைத்தொழில் உற்பத்தி தனியார் கைத்தொழில் உற்பத்தியிலும் பார்க்க மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இதைச் சமீபத்தில் மதிப்பீட்டுப்புள்ளி விபர இலாகா மேற்கொண்ட கைத்தொழில்உற்பத்தி ஆய்வில் கண்டுபிடித்துள்ளது.

இவ்வாராய்ச்சியின் மூலம் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது' தனியார் கைத்தொழில்களில் புகையிலைக் கைத்தொழில், பெட்ரோல், கனிபொருட்கள், குடிவகையுற்பத்தி ஆகியன அரசாங்க கைத்தொழில் உற்பத்திகளிலும் பார்க்க கூடிய உற்பத்தியைக் கொடுக்கின்றன இவற்றைவிட மற்றும் 17 கைத்தொழில்கள் அரசாங்க துறைக் கைத்தொழில்களிலும்பார்க்க கூடிய உற்பத்தியைக் கொடுக்கின்றன அரசாங்கத்துறைக் கைத்தொழில்களில் குடிவகைகள் உற்பத்தி, தோல்உற்பத்தி மரம் வெட்டுத்தொழில் ஆகியன அதிகவருவாயைக் கொடுப்பனவாக உள்ளன,

திட்டமிடுபவர்களின் தேவை, வேலைவாய்ப்பளித்தல், செலவாகும் முதல் ஆகியனபற்றிஅறிவதற்கே மேற்படிகைத்தொழில் உற்பத்தி ஆய்வு நடாத்தப்பட்டது.

## ஸ்ரீ. ல. சு...


(1-ம் பக்கத் தொடர்ச்சி)


யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய கலாசாரத்துக்கான பகுதி ஒன்று இணைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தனர்,

பாப்பரசரை வரவேற்பதில் இலங்கை அரசாங்கம் செய்திருந்த ஏற்பாடுகள் பற்றி இக்கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. கத்தோலிக்க மக்கள் சார்பில் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

(கு வி ம)

# கிறிஸ்தவ பெற்றோருக்கு மறைக் கல்வி மன்றம்

## மறைக்கல்வி மகாநாட்டில் தீர்மானம்

பண்டத்தரிப்பு ஞாயிறு

அகில இலங்கை மறைக் கல்வி மகாநாட்டின் 2ம் நாள் நிகழ்ச்சிகள் சங். சகோ. றேஸின் உரையுடன் ஆரம்பமானது. 'பெற்றோர் குடும்பவாழ்வு பற்றிய அறிவைப் பிள்ளைகட்கு ஊட்ட வேண்டும் அவர்களின் வாழ்வு திருவருட் சாதனங்களுடன் இணைந்த வாழ்வாக அமைய வேண்டும். தாய் தந்தையார் குடும்பத்தில் தனித்துவம் பாராட்டுவாராளாயின் பிள்ளைகளும் அவ் வழியையே பின்பற்றுவர். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் குடும்பத்தில் இருக்க வேண்டும். எல்லா விதத்திலும் பெற்றோர்பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்கி திருவருட் சாதனங்களை அன்றட வாழ்வுடன் இணைத்து வாழ முயற்சி எடுக்கவேண்டும்' என்று அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் மகாநாடு இரு தினங்கள் நடைபெற்றது. பிற்பகல் நடைபெற்ற உரையாடலில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி ஆசிரியர் திரு எல். எம். ஜோசப் பேசுகையில் 'இன்றைய சமுதாயத்தில் முக்கிய பிரச்னையாக விளங்குவது இளைஞர் பிரச்னையே என்றும், அது ஒரு தனி நாட்டில் மட்டுமன்றி உலகம் எங்கும் நிலவுவதாகவும் திறமை, ஆற்றல் அனைத்தும் நிறைந்த இளைஞர் பிற்போக்கான நிலையடைவதற்கு பெற்றோரே காரணமாய் அமைகின்றனர் என்றும், வாழ்க்கைக்குரிய சிறந்தவழி காட்டப்படாமையால் இளைஞர்களின் வாழ்க்கை பாழடிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

திருமலைத் துணை ஆயர் வண பிதா, தியோகுப்பிள்ளை ஆயர் கூட்டுப்பூசை குருக்களோடு சேர்ந்து ஒப்புக்கொடுத்தார். திவ்விய பூசையின் போது வண பிதா. யே. சின்னப்பு திருவுரையாற்றினர்.

கிறீஸ்தவ திருமறைக் கல்விச்சபை பங்குகளில் ஸ்தாபித்தல், பெற்றோர்க்கு மறைக் கல்விமன்றம் அமைத்தல் உட்படப் பல தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. நற்கருணை ஆசிருடன் மகாநாடு முடிவடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org